விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 127 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 11 புதன்கிழமை (24.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.03, 2ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## ஈரான் ஜனாதிபதி ரைசி இன்று இலங்கை விஜயம்

### நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு



(கொழும்பு)

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி இன்று இலங்கை விஜயம் செய்யவுள்ள நிலையில் நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர்

### மே தினப் பேரணியில் அறிவிக்கப்படுவார்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள பேரணியில் 02

## போதை ஊசி செலுத்தி

### பெண்ணொருவர் கூட்டு வன்புணர்வு

**யாழில் அதிர்ச்சி சம்பவம்**
**பொலிஸ் விசாரணை ஆரம்பம்**

(கரணவாய்)

யாழ்ப்பாணத்தில் போதை ஊசி செலுத்தி பெண்ணொருவரை கும்பல் ஒன்று பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளதாக 15

## அரச வருமானம் அதிகரிப்பு

(கொழும்பு)

2024ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் எதிர்பார்க்கப்பட்ட அரச வருமானத்தை விட அதிக வருமானத்தை ஈட்ட முடிந்ததாக நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். 02

# கடன் மறுசீரமைப்பில் மாற்றம் இல்லை

### அமைச்சர் பந்துல குணவர்த்தன



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் ஆரம்பிக்கப்பட்ட கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எவ்வித மாற்றமுமின்றி தொடர்வதாக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

**யாழ்.போதனாவில்**

## சிறைச்சாலை சந்தேக நபர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவர், யாழ்ப்பாணம் போதனா வைத்திய 15

## ஊடகங்களை அடக்க முற்படுவதை பார்த்துக் கொண்டிருக்க முடியாது

### வலம்புரி ஆசிரியர் பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஊடகங்களின் குரல்வளையை அடக்க முற்படுவதுதான் தமிழ்த் தேசத்தின் ஆன்மாவை நசுக்குவதற்கு ஒப்பானது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச் 15

**சு.க.பதவியிலிருந்து**

## மைத்திரிபால இராஜினாமா?

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இராஜினாமா செய்யத் தயாராகி வருவதாகத் 02

## தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிவரை கடலில் நீந்திக் கடக்க முயன்றவர்

### நெஞ்சுவலி காரணமாக நடுக்கடலில் மரணம்

(மன்னார்)

தலைமன்னார் முதல் தனுஷ்கோடி அரிச்சல்முனை வரை தொடர் ஓட்ட முறையில் நீந்திக் கடக்க முயன்ற பெங்களூருவைச் சேர்ந்த ஒருவர் நடுக்கடலில் நெஞ்சு வலி காரணமாக உயிரிழந்தார்.

இலங்கை தலைமன்னார் முதல் தனுஷ்கோடி வரை உள்ள 30 கிலோமீற்றர் தூரம் பாக் ஜலசந்தி கடல் பகுதியை சமீப காலமாக வெளியூர் மற்றும் வெளி மாநிலங்களைச் சேர்ந்த பல 15


## தையிட்டி விகாரைக்கு எதிராகப் போராட்டம்



15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 - 08 - 1946

மறைவு 24 - 04 - 2023

## அமரர் ஐயாத்துரை சண்முகலிங்கம்

(குப்பிழான் ஐ.சண்முகன்)

திதி : சித்திரை பூர்வபட்ச சதுர்த்தி

எமைப் பிரிந்து ஓராண்டு கடந்திடினும்
நும் பிரிவை எம்மால் கடக்கவே இயலவில்லை
கலங்கியே, வாழ்வினை ஓட்டியே சென்றிடும் எங்களுக்கு
கலங்கரை விளக்கதாய் வழிகாட்டியே ஒளிர்ந்திடுவீர்

தங்கள் ஆத்மா இறைவனின் திருவடி நிழலில்
பேரானந்தப் பெருவாழ்வு பெற்றிட
இறைஞ்சி நிற்கின்றோம்.

(C-0195)

மாணிக்கவளவு,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம் 12 - 03 - 1961

மறைவு 21 - 04 - 2024

## திருமதி பூலோகராஜா நிர்மலா

அச்சுவேலி வடக்கு மடத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பண்டிதை திருமதி பூலோகராஜா நிர்மலா அவர்கள் 21.04.2024 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரன் பூலோகராஜாவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற செல்வரத்தினம் - தவமணி தம்பதியினரின் மூத்த மகளும் காலஞ்சென்ற பாலன்கந்தையா(பா.க) - அன்னப்பிள்ளை அவர்களின் பேர்த்தியும் அன்னாரின் உடன்பிறந்த இராகன், ஸ்ரீராகவன், சுமங்கலா, ஸ்ரீரஞ்சன், தரங்கினி, விஸ்ணுவர்மன் ஆகியோரின் சகோதரியும் பிரியா, சந்திரா, குலசேகரம், இந்திராணி, இந்திரன், மேனகா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.04.2024) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் அச்சுவேலி வடக்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

077 897 6626
076 949 5630

தகவல்: குடும்பத்தினர்

(545)

# பிரம்மஸ்ரீ ரகுபதி சர்மாவுக்கு டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)



பிரம்மஸ்ரீ ரகுபதி சர்மா அவர்களுக்கு குலோபல் பீஸ் பல்கலையின் இலங்கை கிளையின் தலைவர் கலாநிதி - ஸ்ரீதயாளன் மற்றும் இந்து கலாசார அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் அவர்களினால் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை குறித்த நிகழ்வானது கலாநிதி சரத் சில்வா தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம.7.10)

## கடன் மறு...

ஹோமாகம தொகுதியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயற்குழு கூட்டத்தில் அமைச்சர் இதனை தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமை மற்றும் நெடுஞ்சாலைகளின் வருமானம் மற்றும் கடனை செலுத்துவதற்கான கால அவகாசம் குறித்து அமைச்சர் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர், சீனா, இந்தியா போன்ற நாடுகளின் நீண்ட கலந்துரையாடலின் விளைவாக கடன் மறுசீரமைப்பு இறுதி ஒப்பந்தம் கைச்சாத்திட வாய்ப்பு உள்ளதுடன் ஜப்பான் மற்றும் பாரிஸ் ஆதரவு வழங்க ஒப்புக்கொண்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-7,10)

## மைத்திரிபால...

தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நீதிமன்றத்தின் தடையுத்தரவுக்கு உள்ளாகியுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் பதவியில் இருந்து மைத்திரிபால சிறிசேன விலகுவார் என்றும் தெரிவிக்கின்றன.

கட்சியின் யாப்பின் பிரகாரம் கட்சி தலைவர் பதவியில் இருந்து விலகும் தலைவர், கட்சியின் போஷகர் பதவிக்கு நியமிக்கப்படுவார்.

தற்போதும் கட்சியில் கடும் கருத்து மோதல் நிலவி வரும் நிலையில், இரு பிரிவினரும் இரண்டு பதில் தலைவர்களின் பெயர்களைக் கூறி தேர்தல் ஆணையத்திடம் கடிதம் கையளித்துள்ளனர்.

இந்த நியமனங்களுக்கு எதிராக அதே கட்சியைச் சேர்ந்த பலரும் தேர்தல் ஆணையுத்திடம் புகார் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## பொதுஜன...

அறிவிக்கப்படும் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மே பேரணி கொழும்பு பொரளை கம்பல் மைதானத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பொதுஜன பெரமுனவின் பல அமைச்சர்கள் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்க ஏற்கனவே தீர்மானித்துள்ளதுடன், ஏனையோர் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட உள்ளவருக்கு ஆதரவளிக்க உள்ளதாக அறிவித்துள்ளனர்.

மேலும் பிரசன்ன ரணதுங்க, பியால் நிஷாந்த, கஞ்சன விஜேசேகர மற்றும் பொதுஜன பெரமுனவின் இளைஞர்கள் பலர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாகவும், நாமல் ராஜபக்ஷ, சாகர காரியவசம் உள்ளிட்ட குழுவினர் இதற்கு எதிராக களமிறங்கத் தீர்மானித்துள்ளதாகவும் கட்சி வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. (ம-7,10)

## அரச வருமானம்...

குறித்த காலப்பகுதியில் நாட்டின் பிரதான வருமானம் ஈட்டக்கூடிய இலங்கை சுங்கம் மற்றும் கலால் வரி திணைக்களம் ஆகியவற்றின் ஊடாக 834 பில்லியன் ரூபா ஈட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை விட 6% வருமான அதிகரிப்பாக காணப்படுகின்றது.

2024 ஆம் ஆண்டிற்குள் 4,106 பில்லியன் ரூபா அரச வருமானம் எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் தெரிவித்தார். (ம-7,10)


லங்கா மஹால் பிறைவேட் லிமிட்டட்
(உள்நாட்டு வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை)

வேலையாள் தேவை
(ஆண்,பெண்)

A/L தகைமையுடைய (கணினி அறிவு அடிப்படை) வேலையாள் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

65, 2nd cross street, Vavuniya.
077 839 3974

(546)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0196)

076 825 7716 (ஆகாஸ்)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் சங்கீத பாட ஆசிரியராக கடமையாற்றும் திருமதி மு.ஜெயகௌரி அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி வேலுப்பிள்ளை தவமணி

அவர்கள் 23.04.2024 நேற்று காலமானார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தோற்றம் 1942.02.07

மறைவு 2024.04.23

(0023)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை சிற்றுண்டிச்சாலைகள் மீது விசேட கவனம் செலுத்துமாறு கோரிக்கை


(கொழும்பு)

பாடசாலை சிற்றுண்டிச் சாலைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துமாறு இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் பாடசாலை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் 2024ஆம் கல்வி ஆண்டுக்கான முதலாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

இந்த நிலையில், நாடளாவிய ரீதியில் இந்த நாட்களில் வயிற்றோட்டம் தொடர்பான நோயாளர்கள் பதிவாகி வருகின்றமையிலேயே பாடசாலை சிற்றுண்டிச்சாலைகள் தொடர்பாக கவனம் செலுத்துமாறு பாடசாலை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ரி)

# இளநீர் விலை அதிகரிப்பு



(கொழும்பு)

நிலவும் அதிக வெப்பநிலை காரணமாக செவ்விளநீர் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக செவ்விளநீர் ஒன்றின் விலை 200 ரூபாவாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தம்புள்ளை பொருளாதார நிலையத்தில் செவ்விளநீரின் மொத்த விலை 100 முதல் 140 ரூபா வரை உள்ளதாகவும் சில இடங்களில் 250 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்யப்படுவதாகவும் வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர். (ரி)

# இலங்கையில் வறுமை மேலும் அதிகரிக்கும்

## உலக வங்கி எதிர்வு கூறல்

(கொழும்பு)

**2026 ஆம் ஆண்டு வரை இலங்கையின் வறுமை விகிதம் 22 வீதத்தை விட அதிகரிக்கும் என உலக வங்கி எதிர்வு கூறியுள்ளது.**

இலங்கையின் பொருளாதாரம் இந்த ஆண்டு 2.2 வீதமிதமான வளர்ச்சியை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுவதாக உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடுமையான பொருளாதார வீழ்ச்சியின் பின்னர் நாடு இன்னும் அதிக அளவிலான வறுமை மற்றும் வருமான சமத்துவமின்மையை எதிர்கொள்வதாகவும் உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.



அதேநேரம், இலங்கையில் வறுமை விகிதங்கள் தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக அதிகரித்துள்ளதாகவும், 2023 ஆம் ஆண்டில் 25.9 வீதமான மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், 2026 ஆம் ஆண்டு வரை நாட்டின் வறுமை விகிதம் 22 வீதத்தை விட அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக உலக வங்கியினால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி)



சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்பாளின் இரதோற்சவம் நேற்றுக் காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

(படங்கள்: சிவசாந்தன்)

# ஆட்சியாளர்கள் மீது மக்களுக்கு நம்பிக்கையில்லை

## உதயகம்மன்பில சுட்டிக்காட்டு



(கொழும்பு)

அரசாங்கம் மக்களுக்கு எவ்வாறான நிவாரணங்களை வழங்கினாலும் மக்களுக்கு ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கை இல்லை என பிவித்துறு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.


கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது தேர்தலில் எமக்கு கொள்கைத் திட்டங்களே அவசியமாகின்றன. 2015 ஆம் ஆண்டு தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ வாக்குகளை இலக்கு வைத்து பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்திருந்தார்.

ஆனால் இறுதியில் தோல்வியே கிடைத்தது. அதேபோல் 2018 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கம் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் தோல்வியை சந்தித்தது. எனவே, இந்த அரசாங்கங்கள் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை.

அரசாங்கம் மக்களுக்கு அரிசியை வழங்கினாலும் அல்லது வேறு நிவாரணங்களை வழங்கினாலும் மக்களுக்கு ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கை இல்லை என அவர் தெரிவித்துள்ளார். (ரி)

# விஜயதாஸவின் நியமனம் சட்டத்திற்கு முரணானது

## மகிந்த அமரவீர



(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நியமிக்கப்பட்டமை சட்டத்திற்கு முரணானது எனவும், இது குறித்து சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அக்கட்சியின் உப தலைவர் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதேநேரம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் பெயரை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவின் பெயர் மற்றும் நிறைவேற்று குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# லக்னோவின் 'லக்கி ஸ்ரரார்' ஸ்ராய்னிஸ்



## தேறாத பந்துவீச்சால் சென்னைக்கு தீராத சோகம்

லக்னோ அணிக்கு எதிரான ஐ.பி.எல்., போட்டியில், பந்துவீச்சாளர்கள் ஏமாற்ற, சென்னை அணி 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. ருதுராஜ் சதம் வீணானது. இந்தியாவில் 17ஆவது சீசன் ஐ.பி.எல்., தொடர் நடக்கிறது. நேற்று சென்னை, சேப் பாக்கம் மைதானத்தில் நடந்த லீக் போட்டியில் நடப்புச் சம்பியன் சென்னை - லக்னோ அணி கள் மோதின. நாணயச்சுழற்சியில் வென்ற லக்னோ அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

சென்னை அணிக்கு அணித் தலை வர் ருதுராஜ், "சீனியர்" ரகானே ஜோடி ஆரம்பம் வழங்கியது. ஹென்றி வீசிய முதல் ஓவரின் கடைசி பந்தில் ரகானே (1) ஆட்டமிழந்தார். மிட்செல் (11) மறு படியும் கிடைத்த வாய்ப்பை வீண டித்து விரைவில் ஆட்டமிழந்தார். ருதுராஜ், ஜடேஜா இணைந்தனர்.

**ருதுராஜ் நம்பிக்கை**

மறுபக்கம் அணித் தலைவருக் குரிய பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார் ருதுராஜ். ஹென்றி ஓவரில் இரண்டு பவுண்டரி அடித்த இவர், குர்னால் பாண்ட்யா, யாஷ் தாகூர் பந்துகளையும் பவுண் டரிக்கு அனுப்பினார். இவர், 28ஆவது பந்தில் அரைச்சதம் எட்டினார். ஜடேஜா 19 பந்தில் 17 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். சென்னை அணி 12 ஓவர்களில் 102/3 ஓட்டங்கள் குவித்தது.

**"ஹட்ரிக்" சிக்சர்**

ருதுராஜுடன் இணைந்தார் ஷிவம் துபே. ஸ்டாய்னிஸ் வீசிய 13ஆவது ஓவரில், இப்போட்டியின் முதல் சிக்சர் அடித்தார். அடுத்து ருதுராஜும் தன் பங்கிற்கு ஒரு சிக்சர் விளாசினார். யாஷ் தாகூர் 16 வது ஓவரை வீசினார். இதில் "ஹட்ரிக்" சிக்சர் அடித்து மிரட்டி னார் துபே. யாஷ் ஓவரில் தலா ஒரு சிக்சர், பவுண்டரி என அடித்த ருது ராஜ், ஐ.பி.எல்., தொடரில் இரண்டா வது சதம் கடந்தார்.

மொசின் கான் வீசிய 19ஆவது ஓவரில் 2 சிக்சர், 1 பவுண்டரி என அடித்த துபே, அரைச்சதம் எட்டினார். நான்காவது விக்கெட்டுக்காக 104 ஓட்டங்களைச் சேர்த்தபோது, துபே (66) ரன் அவுட்டானார். கடைசி பந்தை எதிர் கொண்ட தோனி பவுண்டரி அடித்தார். 20 ஓவர்களில் சென்னை அணி 210/4 ஓட்டங்களைக் குவித்தது. ருது ராஜ் (108), தோனி (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**ஸ்ராய்னிஸ் சதம்**

லக்னோ அணிக்கு குயின்ரன் டி கொக் (0), ராகுல் (16) ஜோடி சுமார் ஆரம்பம் வழங்கிது. படிக்கல் 13, பூரன் 34 ஓட்டங்கள் எடுத்தனர். ஸ்ராய்னிஸ் 56ஆவது பந்தில் சதம் எட்டினார். கடைசி ஓவரில் லக்னோ வெற்றிக்கு 17 ஓட்டங்கள் தேவைப்பட்டன. முஸ்த பிஜுர் வீசிய முதல் இரு பந்தில் 6, 4 என அடித்தார் ஸ்டாய்னிஸ். அடுத்து "நோ போலாக" வீசப்பட்ட பந்திலும் பவுண்டரி அடித்த ஸ்ராய்னிஸ், மறு படியும் ஒரு பவுண்டரி விளாசினார். லக்னோ அணி 19.3 ஓவர்களில் 213/4 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஸ்ராய்னிஸ் (124), தீபக் ஹூடா (17) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.(ம-7,10)

61 வது பிறந்த தின நினைவலைகள்

சைவ சித்தாந்த பண்டிதர்

சிவஸ்ரீ தியாக. சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்

BA. MA. Dip. in. Edu

தும்பளை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம், இலட்சுமணந்தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன், வட பத்திரகாளி அம்மன் தேவஸ்தானாதிபதியும் ஆதீனகர்த்தாவும்



குழந்தையாக இருந்த
பொழுது உன்னை இறுக
கட்டியணைத்தபடி உன்
அரவணைப்பிலும்
பாதுகாப்பிலும் வாழ்ந்த
நாட்கள் மீண்டும் வராதா
என்று எம் இதயம்
ஏங்குகிறது அப்பா...
தன் மூச்சு உள்ளவரை
எமக்காக நேசிப்பவர்
எமக்காகத்தான் சுவாசிப்பவர்
எம் அப்பா

இனிய பிறந்தநாள்
வாழ்த்துக்கள் அப்பா



குடும்பத்தினர்

(0024)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ்நாடு தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகத்தின் கல்வியியல் துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் கு.சின்னப்பன் ஆசிரியர் கல்வியின் சமகால செல்நெறி என்ற பொருளில் அமைந்த அதிதி சிறப்புரை நேற்று கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்றது.

(படம்: சிவசாந்தன்)


# ஓராண்டு நினைவுகளில்



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி நந்தினி வசந்தரூபன்
அவர்களின் அன்புத் தந்தை

அமரர்.
## செல்லையா நடராசா

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு
நாளில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திப்பதோடு
அவரின் பிரிவினால் ஆறாத்துயருறும்
அவரது குடும்பத்தினருடன்
துயர்பகிர்கின்றோம்.

(541)

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/சென் ஜோசப் வித்தியாலயம்.**


## ஊர்காவற்றுறை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் (வ-து) கிளைக்குழுக்களைத் தெரிவு செய்தல் - 27.04.2024 (சனிக்கிழமை)

தமிழ்நாடு தஞ்சாவூர் தமிழ் பல்கலைக் கழகத்தின் கல்வியியல் துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் கு. சின்னப்பன் ஆசிரியர் கல்வியின் சமகால செல்நெறி என்ற பொருளில் அமைந்த அதிதி சிறப்புரை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெற்றது. அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்றது. (படம்டு சிவசாந்தன்.)

| தொ. இல | கிளை இல | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடங்கள் | தவிசாளர் |
|---|---|---|---|---|
| 1 | 94 | ஊர்காவற்றுறை | அண்ணா சன சமூக நிலையம் உப்புக்குள வீதி ஊர்காவற்றுறை. | க.வக்ஷன் |
| 2 | 95 | ஒழுவில் | போத்தல் அடைப்பு நிலையம் நாரந்தனை தெற்கு ஊர்காவற்றுறை | ஜெ.சதீஸ் |
| 3 | 96 | நாரந்தனை தெற்கு | அண்ணா சன சமூக நிலையம் நாரந்தனை தெற்கு ஊர்காவற்றுறை | பா.ரூபராஜ் |
| 4 | 99 | எழுவைதீவு | பொதுமண்டபம் எழுவைதீவு | இ.கஜெந்தன் |
| 5 | 101 | முகாம் வீதி | அண்ணா முன்பள்ளி நிலையம் உப்புக்குள வீதி ஊர்காவற்றுறை | அ.வசிகரன் |
| 6 | 102 | நாரந்தனை வடக்கு | சங்க தலைமை அலுவலக மண்டபம் ஆஸ்பத்திரி வீதி ஊர்காவற்றுறை. | த.கண்ணதாசன் |
| 7 | 103 | நாரந்தனை கிழக்கு | யா/நாரந்தனை றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம் நாரந்தனை மத்தி ஊர்காவற்றுறை | இ.வேல்குமார் |

**ஊர்காவற்றுறை ப.தெ.வ.அபி.**
**கூட்டுறவுச் சங்கம்,**
**ஆஸ்பத்திரி வீதி ஊர்காவற்றுறை.** (536)

**திரு.தீ.அ.பெர்னாண்டோ**
**கௌரவ செயலாளர்.**

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 80 | 100-130 | 120 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 140 | 155 | 200 |
| பச்சைமிளகாய் | 120 | 80 | 100 | 120 | 120 |
| தக்காளி | 100 | 80 | 70 | 80-100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 120 | 100-140 | 140 |
| கோவா | 160 | 180 | 150 | 200 | 250 |
| கரட் | 300 | 300 | 280 | 300 | 400 |
| பூசணி | 120 | 130 | 80 | 80-100 | 120 |
| புடோல் | 100 | 200 | 100 | 100 | 120 |
| வாழைக்காய் | 100 | 100 | 50 | 60-80 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 320 | 300 | 200-320 | 350 |
| பெரிய வெங்காயம் | 350 | 350 | 250 | 230 | 400 |
| பாகற்காய் | 500 | 400 | 300 | 600 | 400 |
| வெண்டக்காய் | 100 | 150 | 60 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 100 | -- | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 250 | 200 | 250 |
| லீக்ஸ் | 320 | 300 | 220 | 220 | 300 |
| பீற்றூட் | 150 | 200 | 180 | 200 | 250 |
| கறிமிளகாய் | 250 | 350 | 200 | 250 | 250 |
| முருங்கைக்காய் | 1000 | 800 | 400 | 400-700 | 800 |
| போஞ்சி | 200 | 300 | 300 | 300 | 400 |
| கத்தரிதம்புள்ள | 100 | 70 | 50 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 150 | 120 | 100 | 80-100 | 150 |
| தேசிக்காய் | 800 | 600 | 500 | 500-700 | 1000 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 110 | 40-80 | 80-130 |
| இராசவள்ளி | 350 | 450 | 300 | -- | 400 |
| வெங்காயப்பூ | -- | 200 | 200 | -- | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 80 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 90 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 200 | 50 | 100 | 80 |
| ஈரப்பலா | -- | -- | 120 | 100 | [illegible] |

# ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 21 பழைய பூங்கா வீதி. ஆதன இல 81, என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் திருமதி. வி.என். ஜோன்பிள்ளை என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்திற்கு 20.03.2010 ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஆர்.சபேசன் முகதாவில் 2338ம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் சிமியோன் யேசுதாசன் ஆதன இடாப்பில் விபரிக்கப்படும் ஆதனம் காலஞ்சென்ற எனது பிதா சிமியோன் பெயரில் அறுதியுறுதி முடிந்ததென்றும் கடந்தகால வன்செயல்களின் போது குறித்த உறுதி தொலைந்து விட்டதென்றும். யாழ்ப்பாணம் காணிக்கந்தோரில் தேடுதல் செய்தும் மீளப்பெற்றுக்கொள்ள முடியவில்லையென்றும், எனக்கு வந்தடைந்த பிதாவழி முதுசமும் ஆட்சியுமுடையதென்றும் இவ்வாதனம் என்னாலும் எனது முன்னோர்களாலும் கடந்த 80 வருடங்களுக்கு மேலாக சொந்தமும், நிந்தமும் தடையற்றதுமான ஆட்சியிலிருந்து வந்ததென்றும், வேறு யாதேனும் விதமாக பாரிக்கப்பட்டோ அல்லது பாராதீனப்படுத்தப்பட்டோ இருக்கவில்லையென்றும், வெளிப்படுத்தல் உறுதி முடிப்பதற்கு எனக்கு போதிய உரித்தும் தத்துவமும் உண்டென்றும் இதனால் வெளிப்படுத்துகிறேன். என வெளிப்படுத்தி உறுதி முடித்துள்ளார்.

குறித்த ஆதனத்தை சிமியோன் யேசுதாசன் உம் பெண் லில்லி மொனிக்காவும் 28.06.2010ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு கே.கேசவன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 11729ம் இலக்க சீதன உறுதிமூலம் அலெக்சாண்டர் மகிந்தன் பெண் தயானி ஷபினாவிற்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று சுண்டுக்குளி இறை "மாவிலங்கை வயல்" நிலப்பரப்பு இரண்டு குளி ஆறுதசம் மூன்று ஏழும் (நி.ப 02.குளி 06.37) இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் திரு.ஆர் இரத்தினராஜா அவர்களால் 03.05.1998 ல் அளந்து வரையப்பட்ட 484ம் இலக்க படத்தில் சுட்டிய 1 ஆம் இலக்க துண்டு, வீடும் கிணறும், செய்பயிர் வான்பயிர்களும்.

இதற்கெல்லைகள்.
கிழக்கு: பழைய பூங்கா வீதி
வடக்கு: வ. சின்னத்தம்பியின் ஆதனம்.
மேற்கு: ஒழுங்கை
தெற்கு: ம.யேக்கப்பின் ஆதனம். இதடங்கலும்

தற்போது அலெக்சாண்டர் மகிந்தன் பெண் தயானி ஷபினா இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது அலெக்சாண்டர் மகிந்தன் பெண் தயானி ஷபினா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை.**
**யாழ்ப்பாணம்.**

(சி-0194)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரோதி வருட புத்தாண்டுப் பலன்கள்

### ஜாதகர்

இந்த வருடம் நிஜமாகவே உங்களுக்கு மிக யோகம் தரும் வருடமாகும். உங்கள் ராசியாதிபதி குரு உச்ச சூரிய சாரம் வாங்கி, உச்ச சூரியனுடன் உள்ளார். 5 ஆம் இடத்தில் 9 ஆம் அதிபதியுடன் நிற்பதாக ஆகிறது. எப்போதும் 5+9 ஆம் அதிபதிகள் சேர்க்கை மிக நன்று. அதிலேயும், 9 ஆம் அதிபதி உச்சமாக ராசிநாதனுடன் நிற்பது எத்தனை மேன்மை. எனவே தான் இந்த வருடம் குருவருளும், இறையருளும் நிறைந்த வருடமாக அமையப்போகிறது. நல்லன எல்லாம் நடக்கும் நேரத்தில், தீயனவற்றை விளக்கித் தள்ளும் சத்தியம் வந்து சேர்ந்துவிடும்.

### தனம்

பணம் வரவர சுப செலவழியும் நிலையும் உண்டு. எனவே பண வரவு கையில் வந்தவுடன், அதனை பூர்வீகத்தில் முதலீடாகவோ, மனை வாங்கி விடவோ வேண்டும். இல்லையெனில் வந்த பணம் மொத்தமும் செலவழிந்து விடும்.

**வாக்கு:** உங்களின் சொற்கள் சற்று கரடு முரடாக, வில்லங்கமாக இருக்கும். உங்கள் பேச்சு, விரயத்துக்கு காரணம் ஆகிவிடும். எனவே பேச்சில் கட்டுப்பாடு தேவை.

**குடும்பம்:** இந்த வருடம் அடிக்கடி குடும்பத்தோடு, குலதெய்வ தரிசனத்துக்கு செல்வீர்கள். அதற்கு உங்கள் தாயாரின் வேண்டுதல் அல்லது வீட்டில் சுப விசேஷம் நடப்பதற்கு முன் குல தெய்வ ஆராதனை என இவை காரணமாக இருக்கும்.

### வீடு

இந்த தனுசு ராசியார், இந்த வருடம் கண்டிப்பாக வீடு வாங்க இயலும், நீங்கள் வாழ்வின் எந்த தளத்தில் இருப்பினும் வீடு வாங்குவீர்கள்.



தனுசு

எலி வலை ஆனாலும் தனி வலை அல்லவா. உங்கள் பெயரில் ஒரு வீடு ரெஜிஸ்டர் பண்ணுவது பெரிய பாக்கியம்தான். இது உங்கள் குலதெய்வ அருளால் கிடைக்கும்.

### நோய்

உங்களுக்கு இந்த வருடம் நிறைய நன்மைகள் கிடைத்தாலும், நோய் ஏற்படும் என்பதால் சற்று கவனம் தேவை.

வருமுன் காப்பதுபோல், உடற்பயிற்சி நடை பயிற்சி என முன்கூட்டியே ஆரம்பித்துவிடுங்கள். இனிப்பை தவிர்க்கவும்.

**எதிரி:** உங்கள் எதிரிகள் பலம் அதிகரிக்கும். மறைந்திருந்து தொல்லை கொடுப்பர். எனினும் அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகள் உதவியால் எதிரிகளிடமிருந்து விடுபடுவீர்கள்.

**வழக்கு:** உங்கள் வழக்குகள் எத்தனை மோசமானதாக- கடினமாக இருப்பினும்,வெற்றி உங்களுக்கே கிடைக்கும்.

### திருமணம்

உங்கள் தாய்வழியில் பெண், பையன் அமைவர். அவர் வெளிநாட்டில் வேலை பார்க்கக்கூடும். திருமணம் உங்களின் பிறந்த ஊரில் நடக்கும். மிக புதுமையான- மேன்மையான, மிகச் சிறப்பாக திருமண விழா கொண்டாட்டங்கள் இடம்பெறும்.

### அதிஷ்டம்

இந்த வருடம் உங்கள் அதிஷ்ட அதிபதி உச்சம் பெற்று அமர உங்கள் ராசியாதிபதி அவரின் சாரம் பெற்று அமர்ந்துள்ளார். இந்த மாதிரி கிரக அமைப்பு எப்போதாவதுதான் அமையும்.



எனவே நீங்கள் அதிஷ்டத்தை தேடி போக வேண்டாம். அதிஷ்டமே உங்களை இடுப்பில் தூக்கி வைத்துக் கொண்டு கொஞ்சும். வேறென்ன வேண்டும். அனைத்து செயல்களும் வளமையும், நிறைமையும் உடையதாக இயங்கும். இந்த மாதிரி காலக்கட்டத்தை தனுசு ராசியார் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் அரசு பதவி மேன்மை அல்லது அரசியலில் முதன்மைக்கு ஆசைப்பட்டால், அதனை இந்த வருடம் நிறைவேற்றி விடுங்கள். காலத்துக்கும் அதன் பயனை அனுபவிக்கலாம்.

### தொழில்

உங்கள் தொழிலுக்குரிய அதிபதி நீசபங்க ராஜ யோகம் வந்ததால் மிகப் பெரிய தொழில் மேன்மையும், சிறு தடங்கலுக்குப் பிறகு நடக்கும். மேலும் உங்கள் தொழில் சிறிய முன்னேற்றம் ஏற்படும்.

### லாபம்

உங்களின் லாபாதிபதி உச்சம். எனவே ரியல் எஸ்டேட், வணிக கல்வி, கலை என நல்ல லாபம் தரும். இந்த அதிக லாபம் அதிக உழைப்பையும் தரும் என சொல்ல வேண்டியதில்லை.

### விரயம்

இந்த வருடம் பயணம் என்பது இருந்து கொண்டே இருக்கும். அது சிறுதூரப் பயணம் அல்லது வெளியூர் வெளிநாட்டு அலைச்சல் இருக்கும்.

### பரிகாரம்

சனி + செவ்வாய் இரவுக்கு வியாழக்கிழமை சாமந்தி பூ மாலை, சர்க்கரை பொங்கலுடன், அகல்விளக்கில் மஞ்சள் நிற துணியில் 21 மிளகாய் மூட்டை கட்டி, விளக்கெண்ணெய் பூச்சி பஞ்சு திரியில் தீபம் ஏற்றவும்.

இந்த வருடம் தனுசு ராசிக்காரர்களுக்கு மிக யோகமான வருடம். அதனால் தாராளமாக 100% மார்க் வாங்குகிறார்கள். சிறிய முன்னேற்றம் ஏற்படும். தானதர்மங்களை செய்து வாருங்கள்.

(தொடரும்)

# இராசிபலன்

24.04.2024
சித்திரை 11, புதன்கிழமை,
பிரதமை முழுவதும்

சுவாதி பின்னிரவு 12.39 மணிவரை
சுபநேரம் -4.30-6.00 மணிவரை
இராகுகாலம் -12.00-1.30 மணிவரை

சந்திராஷ்டமம்.
சதயம், பூரட்டாதி.

வளவன்

**மேஷம்** — தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், விருந்தினர் வருகையுண்டு காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்** — கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**மிதுனம்** — சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்** — தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.

**சிம்மம்** — உறவினர் நண்பர்களின ஒத்துழைபபு கிடைககும் வாய்ப்புண்டு, பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**கன்னி** — எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடித்து வெற்றி காண்பீர்கள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், உடல் நலன் சிராகி உற்சாகத்தோடு செயற்படுவீர்கள்.

**துலாம்** — செலவுக்கேற்ப வருமானம் வந்து சேரலாம், குடும்ப பெரியவர்களின் சொற்களைக் கேட்டு நடப்பீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** — பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், காரியங்களில் வெற்றி பெற கணபதியை வழிபட வேண்டிய நாள்.

**தனுசு** — விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மகரம்** — பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்,செய் தொழிலில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**கும்பம்** — தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், ஆரோக்கியம் சீராக நடவடிக்கை எடுப்பீர்கள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பயணங்கள் கைகூடும்.

**மீனம்** — குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசி விட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

மூடநம்பிக் [illegible] அர்த்தமற்ற பயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழாக்காணும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்,
முன்னாள் துணைவேந்தர்
யாழ்.பல்கலைக்கழகம்

தமிழ்நாட்டைச் சேர்ந்த புகழ் பூத்த தமிழ்ப் பேராசிரியர்.நா. வானமாமலைக்கும் இந்தியாவின் முன்னைநாள் மத்திய மாநில அமைச்சராகவும், மகாராஷ்டிரா மாநில கவர்னருமாக இருந்த கௌரவ சி.சுப்பிரமணியம் அவர்கள் விவசாயப் பசுமைப் புரட்சிக்கு ஆற்றிய அரசியல் நிர்வாகம்சார் சேவைக்கும், திருவாசக அடிப்பொடி இராமச்சந்திரன் அவர்களுக்கு சமயப்பணிக்கு ஆற்றிய சேவைகளுக்கும் கௌரவித்து கலாநிதிப் பட்டங்களை இப்பல்கலைக்கழகம் வழங்கியது. பல்கலைக்கழகத்தின் ஆரம்ப நிலையின் பேராசிரியர்களாகப் பதவி வகித்து பல்கலைக்கழக வளர்ச்சிக்கு அரும்பணியாற்றிவர்களை பல்கலைக்கழகம் D.Sc, D.Lit பட்டங்களை வழங்கி கௌரவித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து 2024 மார்ச் வரை 38 பட்டமளிப்பு விழாக்கள் நடைபெற்றுள்ளன.

### துணைவேந்தர்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்களாகப் பின்வருவோர் கடமையாற்றியுள்ளார்கள்.

கலாநிதி கே. கைலாசபதி - ஓகஸ்ட் 1974 -யூலை 1977 (வளாகத் தலைவர்)

பேராசிரியர்.எஸ் வித்தியானந்தன் - ஓகஸ்ட் 1977 - டிசெம்பர் 1978 (வளாகத் தலைவர்)

பேராசிரியர்.எஸ் வித்தியானந்தன் - ஜனவரி 1979 -யூன் 1988 (துணைவேந்தர்)

பேராசிரியர்.வி.கே.கணேசலிங்கம் - யூலை 1988 - ஓகஸ்ட் 1988

பேராசிரியர்.ஏ.துரைராசா - செப்ரெம்பர் 1988 - மார்ச் 1994

பேராசிரியர்.கே.குணரட்னம் - ஏப்ரல் 1994 - யூன் 1996

பேராசிரியர்.பி.பாலசுந்தரம் பிள்ளை - யூலை 1996 - மார்ச் 2003

பேராசிரியர்.எஸ்.மோகனதாஸ் - மார்ச் 2003 - மார்ச் 2006

பேராசிரியர்.எஸ்.ஆர்.எச். கூல் - மார்ச் 2006 - யூன் 2006

பேராசிரியர்.ஆர்.குமாரவடிவேல் - யூன் 2006 - டிசெம்பர் 2007

பேராசிரியர்.என்.சண்முகலிங்கன் - டிசெம்பர் 2007 - மார்ச் 2011

பேராசிரியர்.செல்வி வசந்தி அரசரட்ணம் - ஏப்ரல் 2011 - ஏப்ரல் 2017

பேராசிரியர்.ஆர்.விக்னேஸ்வரன் - ஏப்ரல் 2017 - ஏப்ரல் 2019

பேராசிரியர்.கே.கந்தசாமி - ஏப்ரல் 2019 - ஆகஸ்ட் 2020 (competent Authority)

பேராசிரியர்.எஸ்.சிறீசற்குணராசா - ஓகஸ்ட் 2020 - இன்றுவரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் பலர் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் முதல் பட்டத்தையும் இங்கிலாந்துப் பல்கலைக்கழகங்களில் கலாநிதிப் பட்டங்களையும் பெற்றிருந்ததால் ஏற்கனவே இலங்கையில் வலுப் பெற்றிருந்த பிரித்தானிய உயர்கல்வி விழுமியங்கள், நடைமுறைகள் ஆகியன மேலும் வலுப்பெற்றன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் பல்வேறு சாதகமற்ற சூழ்நிலைகளுக்கு மத்தியில் பல்கலைக்கழகத்திற்கும் சமூகத்திற்கும் பிரதேசத்திற்கும் பெரும்பணி ஆற்ற வேண்டியிருந்ததால் அவர்களின் வகிபாகம் பல்வகைப்பட்டதாக விருந்தது. பல்கலைக்கழகத்தின் 50 வருட வரலாற்றில் முதல் 35 வருடங்கள் பல்கலைக்கழகம் அமைந்திருந்த பிரதேசம் பல போராட்டங்களையும், யுத்தங்களையும் எதிர்கொண்டிருந்தது.

### பதிவாளர்கள்

பல்கலைக்கழகப் பதிவாளர்களாக இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த திரு.கே.சிவநாதன், இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த அனுபவமும் ஆற்றலும் மிக்கவர்களான திரு.வி.என்.சிவராசா, திரு.கே.சி.லோகேஸ்வரன், திரு.எஸ்.தர்மபாலன், திரு.எஸ். கே.பரமேஸ்வரன் மற்றும் கலாநிதி. கே.குணராசா ஆகியோர் அரச சேவையில் இருந்து சிறிதுகாலம் பல்கலைக்கழக சேவைக்கு விடுவிக்கப்பட்டு, பின்னர் மீண்டும் அரச சேவைக்குச் சென்றனர்.



03

திருமதி.என்.தங்கராசாவும், தற்போதைய பதிவாளர் திரு.வி. காண்டீபனும் பல்கலைக்கழகப் பதிவாளர்களாக நியமனம் பெற்றவர்களாவர். திரு.காண்டீபன் அவர்கள் 2009 ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை பதிவாளராக கடமையாற்றி வருகின்றார்.

திருமதி.என். பாலகிருஷ்ணன், திரு.ஜெ.எச்.அரியரெத்தினம், திரு. கந்தசாமி, திருமதி.அனுஷா சிவநேசன் ஆகியோர் தங்கள் பல்கலைக்கழக உயர் நிர்வாகப் பதவியுடன் பதிற் பதிவாளர்களாகக் கடமையாற்றியுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### பேராசிரியர் வித்தியானந்தன் நூலகமும் நூலகர்களும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் ஒப்பந்தக்காரர் பிரச்சினை, யுத்தம், கட்டிட பொருள் பற்றாக்குறை வால் பல காலம் வேலை தடைப்பட்டு இருந்து துணைவேந்தர் பேராசிரியர் பி.பாலசுந்தரம்பிள்ளை காலத்தில் கட்டட வேலை நிறைவு பெற்று 1998 இல் திறக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் இன்று தரமான கட்டடத் தொகுதியையும் 275,000 இற்கும் மேற்பட்ட நூல்களையும் சஞ்சிகைகளையும் பழமையான ஆவணங்கள் ஓலைச்சுவடிகளையும் கொண்டு பல்கலைக்கழகக் கல்விக்கும் ஆராய்ச்சிக்கும் ஆதாரமாக விளங்குகின்றது. இதனுடைய வளர்ச்சிக்கு கடந்த காலங்களில் நூலகர்களாகப் பதவி வகித்தவர்கள் மிகப்பெரும் பணிகளை ஆற்றியுள்ளனர். ஆரம்ப நிலையில் பதில் நூலகராகக் கடமையாற்றிய யாழ்ப்பாணக் கல்லூரியிலிருந்து வந்த திரு.R.S.தம்பையா, பின்னர் நூலகர்களாக சி.முருகவேள், திருமதி ஆர்.பரராஜசேகரம், திருமதி கருனாந்த ராஜா, செல்வி. ஸ்ரீகாந்த லட்சுமி அருளானந்தம் ஆகியோர் பணியாற்றியுள்ளனர். செல்வி.ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் காலமான பின்னர் அவரால் சேகரித்து வைக்கப்பட்ட அரிய பல அறிவுப் பொக்கிசங்கள் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. நூலகர்களால் இந்நூலகம் சிறப்பாகக் கட்டி வளர்க்கப்பட்டுள்ளது. தற்போதைய நூலகராக திருமதி கல்பனா சந்திரசேகரம் கடமையாற்றுகின்றார்.

இந்நூலகத்தில் 84 பேர் பல நிலைகளில் இன்று பணி புரிகிறார்கள். மறைந்த துணைவேந்தர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் ஞாபகார்த்தமாக பல்கலைக்கழகத்தின் நூலகம் வித்தியானந்தன் நூலகம் என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

### நிதியாளர்கள்

பல்கலைக்கழக நிதியாளர்களாக திரு.ஈழலிங்கம், திரு.ஆலாசுந்தரம், திரு.கே.கனகரெத்தினம், திரு.ஆர்.சி.இராமகிருஷ்ணன் மற்றும் திரு.ஆர்.சிவநடராசா ஆகியோர் மிகவும் சிறந்த சேவையாற்றியுள்ளார்கள். இன்று நிதியாளராகக் கடமையாற்றும் திரு.கே.சுரேஸ் குமார் நாட்டின் நிதிநெருக்கடி நிலையிலும் சிறந்த நிதி முகாமைத்துவம் மூலம் நிலைமைகளைச் சிறப்பாகக் கையாள்கின்றார்.

### பாதுகாப்பு அதிகாரிகள்

பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு அதிகாரியாக திரு.எம்.புத்திரசிகாமணி மிக நீண்டகாலம் சேவையாற்றி 2002 இல் இளைப்பாறியவராவார். இவர் மிக நெருக்கடியான காலகட்டத்தில் பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பினைச் சிறப்பாகக் கையாண்ட ஓர் அதிகாரியாவார். இப்பல்கலைக்கழகத்தில் இணைவதற்கு முன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒழுக்காற்று அதிகாரியாக சிறப்பாகக் கடமையாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரின் பின் பலர் பதில் பாதுகாப்பு அதிகாரிகளாகக் கடமையாற்றினர். 2022 இல் தான் திரு.கே.நாதன் பாதுகாப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

பல்கலைக்கழகம் மிகக்குறுகிய காலத்தில் கல்வித்துறையில் நல்ல வளர்ச்சி பெற்றதற்கு காரணம் யாழ்ப்பாணப் பின்புலத்துடன் சிறந்த கல்வித்தகைமை பெற்ற, பேராதனை, கொழும்பு, களனி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிப்பட்டப்பிரிவு மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் மற்றும் ஆய்வு நிறுவனங்களிலும் கடமையாற்றிய சிரேஷ்ட விரிவுரையாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் பலர் தாமே விரும்பி இங்குவந்து பணிபுரிந்தமையாகும். இதனால் பல்கலைக்கழக ஆரம்ப செயற்பாடுகள் மிகவேகமாக இடம்பெற்றன. புதிய பல்கலைக்கழகங்கள் வழமையாக எதிர்நோக்கும் விரிவுரையாளர்கள், நிர்வாகிகள், தொழில்நுட்பவியலாளர்கள் பற்றாக்குறையை இப்பல்கலைக்கழகம் எதிர்நோக்கவில்லை.1974 - 1984 இற்கு இடைப்பட்ட 10 ஆண்டுகளில் பிற பல்கலைக்கழகங்கள் / ஆராய்ச்சி நிறுவனங்களில் இருந்து இங்கு பணியாற்ற வந்தவர்கள் விபரம் பின்வருமாறு:


**விஞ்ஞானபீடம்** - பேராசிரியர்கள் க.கனகசபாபதி, கே.குணரெத்தினம், வி.தர்மரெத்தினம், பி.துரைராசா, வி.கே.கணேசலிங்கம், கே.தெய்வேந்திரராஜா, எஸ்.மகேஸ்வரன், திருமதி.ஆர்.மகேஸ்வரன், பாலன் செல்லையா, ஆர்.குமாரவடிவேல், Fr.இராசேந்திரன், கே.கனகநாதன், பி.மகினன், எஸ்.மோகனதாஸ், எஸ்.கந்தையா, கே.சித்திரவடிவேல், திருமதி செல்வராசா, திரு.சத்தியதாஸ்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# இமையமலையில் வேகமாக உருகும் பனிப்பாறைகள்



(டில்லி)

காலநிலை மாற்றம் மற்றும் அதிக வெப்பம் காரணமாக இமயமலை பகுதியில் இருக்கும் பனிப்பாறைகள் வேகமாக உருகுவதாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இந்தியாவில், வட மாநிலங்களில் கோடை வெயில் தாக்கம் அதிகரித்து வருகிறது.

பல்வேறு பகுதிகளில் வெப்ப அலை வீசுவதால் பொதுமக்கள் பகல் நேரங்களில் வெளியில் செல்ல முடியாமல் வீட்டிலேயே முடங்கியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

அதிக வெப்பம் காரணமாக இமயமலைப் பகுதியில் இருக்கும் ஏரிகளின் விரிவாக்கத்திற்கும் புதிய ஏரிகள் உருவாவதற்கும், பனிப்பாறை விரிவடைதலுக்கும் வழிவகுப்பதாக இஸ்ரோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பனிப்பாறைகள் உருகுவதன் மூலம் உருவாகும் இந்த நீர்நிலைகள் பனிப்பாறை ஏரிகள் என அழைக்கப்படுகிறது.

பனிப்பாறை விரிவடைவதால் ஏரி வெடிப்பு, பெரு வெள்ளங்கள் போன்ற குறிப்பிடத்தக்க அபாயங்களும் ஏற்படுவதாகவும், இது பேரழிவு தரும் விளைவுகள் எனவும் இஸ்ரோவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மோரைன் அல்லது பனிக்கட்டி போன்ற இயற்கை அணைகள் உடைவதால் பனிப்பாறை ஏரிகள் அதிக அளவு உருகும் நீரை வெளியிடும் போது வெள்ளம் ஏற்படுகிறது. இதன் விளைவாக கீழ்நோக்கி திடீர் மற்றும் கடுமையான வெள்ளம் ஏற்படுகிறது.

கடந்த 1984 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான இந்திய இமயமலை ஆற்றுப்படுகைகளின் நீர்ப்பிடிப்புகளை உள்ளடக்கிய நீண்ட கால செயற்கைக்கோள் படங்களில் பனிப்பாறை ஏரிகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டு இருப்பது தெரிய வந்துள்ளது.

மேலும், 2016 - 2017 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்ட 10 ஹெக்டேருக்கும் அதிகமான 2,431 ஏரிகளில், 89 சதவீதம் அதாவது 676 பனிப்பாறை ஏரிகள் 1984 ஆம் ஆண்டில் இருந்து குறிப்பிடத்தக்க வகையில் விரிவடைந்துள்ளன.

கடந்த 38 ஆண்டுகளில் இரு மடங்கு வேகத்தில் பனிப்பாறைகள் உருகுவதால், ஏரிகள் சுற்றுச்சூழலில் மாற்றங்கள் ஏற்படுவதுடன், பனிப்பாறை ஏரி வெடிப்பு வெள்ளத்தின் அபாயமும் அதிகரித்துள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# சுமார் 80

# மரணபீதியில்

(தைபே)

**தாய்வானில் அடுத்தடுத்து 80 இற்கும் பட்ட முறை நிலநடுக்கம் ஏற்பட்டதால் டங்கள் குலுங்கின. இதனால் மக்கள் டைந்துள்ளனர்.**



# காசா மருத்துவமனையில் மனிதப் புதைகுழி 50 இற்கும் மேற்பட்ட உடல்கள் மீட்பு!



(காசா)

இஸ்ரேலிய படையினரால் கொல்லப்பட்ட 50 இற்கும் அதிகமானவர்களின் உடல்களை நாசர் மருத்துவ க்கட்டிட தொகுதியில் மீட்டுள்ளதாக சுகாதார பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலிய படையினரால் கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட 50இற்கும் அதிகமானவர்களின் உடல்களை மீட்டுள்ளதாக சுகாதார பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாசர் மருத்துவமனையின் கொல்லைப்புறத்தில் இந்த உடல்களை மீட்டுள்ளதாக சிவில் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

நாசர் மருத்துவ கட்டிட தொகுதிக்குள் இஸ்ரேலிய படையினர் புதைத்த புதைகுழிகள் காணப்படுகின்றன. 50 இற்கும் மேற்பட்ட தியாகிகளின் உடல்களை பார்த்து அதிர்ச்சியடைந்தோம் என சிவில் பாதுகாப்பு முகவர் அமைப்பின் பேச்சாளர் மஹ்மூட் பாசல் தெரிவித்துள்ளார்.

தேடுதல் நடவடிக்கையில் நாங்கள் தொடர்ந்தும் ஈடுபடுகின்றோம் கொல்லப்பட்ட தியாகிகளின் எண்ணிக்கையை அறிவதற்காக அனைத்து புதைகுழிகளும் தோண்டப்படுவதற்காக காத்திருக்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி மாத நடுப்பகுதியில் இந்த மருத்துவமனையில் கடும் மோதல்கள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இரு ஹெ மோதி

## இந்தியர் உட



(மலேசியா)

மலேசிய கடற்படைக்குச் சொந்தமான இரு ஹெலிகொப்டர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலநடுக்கங்கள் தாய்வான் மக்கள்!

ம் மேற்
ல் கட்ட
ர் பீதிய

கிழக்கு ஆசியாவில் உள்ள தாய்வான் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படும் நாடுகளில் ஒன்றாக உள்ளது. இந்த நிலையில் தாய்வானில் நேற்றுமுன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை அடுத்தடுத்து தொடர்ந்து நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

80 இற்கும் மேற்பட்ட முறை நிலநடுக்கங்கள் ஏற்பட்டதால், மக்கள் பீதியடைந்தனர். அதிகபட்சமாக ரிக்டர் அளவுகோலில் 6.3 என்ற அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதனால், தலைநகர் தைபே உள்ளிட்ட இடங்களில் கட்டடங்கள் குலுங்கின. இதனால் உயரமான கட்டடங்களில் இருந்த மக்கள் அலறியடித்துக் கொண்டு வீதிகளில் ஓடி தஞ்சமடைந்தனர்.

ஹுலைன் மாகாணத்தை மையமாக கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதே இடத்தில் தான் கடந்த 3 ஆம் திகதி ரிக்டர் அளவுகோலில் 7.2 என்ற அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. அந்த நிலநடுக்கத்தில் 14 பேர் பலியாகினர்.

தாய்வானில் ஏப்ரல் 3 ஆம் திகதியில் இருந்தே தொடர்ந்து அதிர்வுகள் ஏற்பட்டு வரும் நிலையில், நேற்று நள்ளிரவில் சக்தி வாய்ந்த 6.2 என்ற அளவில் மிகக் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளமை மக்கள் மத்தியில் பீதியை உருவாக்கியுள்ளது.

சேத விபரம் குறித்து தற்போது வரை எந்த தகவலும் இல்லை. சில இடங்களில் மட்டும் கட்டடங்கள் லேசான சேதமடைந்திருப்பதாகவும். உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை என்றும் தாய்வான் அரசு அதிகாரிகள் தெரிவித்தனர். (ந)



## டிக்டொக் செயலிக்கு தடைவிதிக்குமாறு கோரிக்கை

சிறுவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் அம்சங்களை இடைநிறுத்துவதற்கான அறிக்கையொன்றை ஐரோப்பிய ஒன்றியம் டிக்டொக் நிறுவனத்திடம் கோரியுள்ளது.

குறித்த அறிக்கையினை வழங்குவதற்கு டிக்டொக் நிறுவனம் தவறும் பட்சத்தில், டிக்டொக் செயலிக்கு ஐரோப்பிய ஒன்றியத்தினால் தடை விதிக்கப்படலாம் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம், காணொளிகளை பார்ப்பதற்காக பயனர்களுக்கு பணம் செலுத்தும் புதிய செயலி குறித்த மேலதிக தகவல்களை வழங்குமாறும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

டிக்டொக் செயலியை பயன் படுத்துவதற்கு இந்தியா உள்ளிட்ட நாடுகள் தடை விதித்துள்ளன. பாதுகாப்பு காரணிகள் காரணமாக குறித்த தடையை இந்தியா அமுல்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சீனாவைச் சேர்ந்த அதிக பிரபலமான டிக்டொக் செயலிக்கு தடை விதிப்பதற்கு அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற வாக்கெடுப்பில் பெரும்பான்மை ஆதரவு கிடைத்துள்ளது.

இதன்படி டிக்டொக் சீன தாய் நிறுவனமான பைடான்ஸை மாற்றிக் கொள்ளா விட்டால் அமெரிக்க சந்தையில் தடைக்கு உள்ளாகும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. (ந)

# ஹெலிகொப்டர்கள் கோர விபத்து

## ...ட்பட 10 பேர் உயிரிழப்பு



ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் பத்து பேர் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஹெலிகொப்டர்களில் பயணம் செய்த அனைவரும் குறித்த விபத்தில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மலேசியக் கடற்படையின் 90 ஆம் ஆண்டு நிகழ்வுக்கான ஒத்திகையின் போது இந்த விபத்து ஏற்பட்டது.

நேற்றுக் காலை 9 மணியளவில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது இந்த இரு ஹெலிகொப்டர்களும் மோதி விபத்துக்குள்ளானது.

உயிரிழந்தவர்களில் ஓர் இந்தியரும் அடங்குவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந)

# சீனாவில் பாரிய வெள்ளப்பெருக்கு 60 ஆயிரம் பேர் வெளியேற்றம்



(பீஜிங்)

சீனாவின் குவான்டோங் மாகாணத்தில் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் கனமழை காரணமாக [illegible] வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், தற்போது அங்கிருந்து சுமார் 60 ஆயிரம்பேர்பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மேலும், அனர்த்தத்தினால் இதுவரை 11 பேர் காணாமல் போயுள்ளதாகவும், உயிரிழப்புகள் எதுவும் பதிவாகவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத்தை உருட்டப்போகும் இயற்கை அழிவுகள்-காலநிலை தடுமாறுகின்றது



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

**வாருங்கள் எம் மினிய உறவுகளே!**

நமக்கான அழிவை நாமே விதைத்து விட்டிருக்கின்றோமோ என உலகத்தின் நடப்பு நிகழ்வுகள் அனைத்தும் கட்டியங்கூறிக் கொண்டிருக்கின்றன. உலகத்தில் பல்வேறு நிகழ்வுகள் நாம் எதிர்பார்த்ததை விட நிகழப் போகின்றன என்பது மட்டும் கண்கூடு. விஞ்ஞானத்தின் பல்வேறு பரிணாமங்களை நாம் உருவாக்கி அதனை எமது தேவைக்காக பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம்என்றால்அதனது விளைவுகள் இன்னும் அபரிவிதமாக இருக்கப் போகின்றன என்பதனை மட்டும் நாம் நம்ப தயாராக இல்லை. எமது தற்றுணிவின் வீராப்பாக இது இருந்தாலும் இயற்கையின் பரிணாமங்களை நாம் இன்னும் பலவாறாககாண இருக்கின்றோம் என்பதனை மட்டும் இப்போதைக்கு ஊகிக்க முடிகின்றது. பாலைவன நாடாக காணப்பட்ட துபாய் நாட்டில் பெய்த அடர் மழையும் அதனால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கும் இதற்கொரு சான்று மட்டுமே. இன்னமும் பலவற்றை நாம் வருங்காலத்தில் எதிர்பார்க்க தயாராக வேண்டும்.

துபாய் நாடு கடந்த ஏப்ரல் 16 இலிருந்து 17ஆம் திகதிவரை இரண்டு வருடங்கள் முழுமையாக பெய்யும் மழை 24 மணித்தியாலங்களில் கொட்டித் தீர்த்திருக்கின்றது. பாலைவன பூமி வெள்ளக் காடானது. மழைக்காக ஏங்கியிருக்கும் நாடு வான் பரப்பில் இரசாயனங்களை தெழித்து மழையை அவ்வப்போது பெற்றுக் கொண்டதாக தகவல். ஆனால் இரசாயனமே இல்லாது நாள் முழுக்க கொட்டித் தீர்த்து துபாய் நாட்டை பிரட்டிப் போட்டிருக்கின்றது அங்கேயுருவான வெள்ளம். கரை புரண்டோடும் வெள்ளத்தைப் பார்த்து துபாய் மக்கள் என்ன உலகமே வியப்பிலாழ்ந்திருக்கின்றது. நடந்தது துபாய் நாட்டுக்கு மட்டுமல்ல நம் அனைவருக்குமான இயற்கையின் வெளிப்படையான செய்தி. பேரிடர்கள் இனி எங்கும் எப்படியும் வராலாம். அதற்கு நாம் தயாராக வேண்டும். இயற்கைக்கு மறாக நாம் செய்யும் அனைத்து நிகழ்வுகளும் இத்தகைய பேரிடர்களை ஏற்படுத்தப் போகின்றன.

நம் நாட்டில் வழமைக்கு மாறான வெப்பநிலை அதிகரிப்பு. உஷ்ணமான காற்று, சில வேளைகளில் காற்றென்று எதுவுமில்லாமல் இலை குழைகள் அசைவு எதுவுமின்றி தவிக்க வைக்கும் வெப்பநிலை. மரத்துக்குக் கீழே கூட ஒதுங்க முடியாதளவிற்கு மிகவும் வரண்ட கால நிலை. எங்கும் நீருக்காக ஏங்கும் மக்கள் அதுவும் நன்னீருக்காக குடிப்பதற்கு தேவையான நீருக்காக அலையும் மக்கள், கால் நடைகள் என இந்த குரோதி வருடம் பல இன்னல்களை எமக்கு தரவிருக்கின்றது என்பதும் மட்டும் தெரிகின்றது.

கடந்த கிழமை பங்களாதேஷின் டாக்கா நகரில் நடைபெற்று முடிந்த மாற்றமடையும் கால நிலையை மையைப்படுத்திய செயற்பாடுகளும் அவற்றுடன் உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக உணவுத் தொகுதியிலேற்படுத்தும் மாற்றங்கள் என்னும் கருத்தில் தெற்காசிய நாடுகளைச் சேர்ந்த ஆறு நாடுகள் ஒன்றிணைந்து கலந்தாய்ந்தனர். அந்தந்த நாடுகளில் காலநிலை மாற்றத்தின் நிலைமைகள். அதற்காக அந்தந்த நாடுகளின் செயற்பாடுகள் திட்டங்கள் அனைத்தும் அலசி ஆராயப்பட்டன. அரசாங்க கொள்கைகளை இன்னும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை குறைப்பதற்கானதாக மாற்றியமைத்தல், வெவ்வேறு நாடுகளில் நடைமுறையிலிருந்தும் கொள்கைசார் செயல் வடிவங்கள், அவற்றின் குறைபாடுகள் மற்றும் செயற்றிறன்கள், என்பனவற்றை செப்பனிடுதல், இணைந்த ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் மாறிவரும் காலநிலை பற்றிய எதிர்வு கூறல்களை துல்லியமானதாக விவசாயிகள் மற்றும் தொழிற்றுறைக்கு அறிவித்தல், இவை பற்றிய கற்றல் செயன் முறைகளை மெருகூட்டுதல், மேலும் அனைத்து தகவல்களையும் மக்களுக்கு வழங்குதல் என பல வகையான தகவல் பரிமாற்ற வழிமுறைகள் இனங் காணப்பட்டுள்ளன. எமது பகுதியில் நிலவும் அதீத வெப்ப நிலையின் தன்மை பற்றியும் அதனால் விவசாய செய்கை, கால் நடை வளர்ப்பு மற்றும் ஏனைய விவசாயம் சார் தொழில்களிலேற்படும் பாதிப்பு, பயிர்ச் செய்கையில் இன்னும் பயிர் அறுவடையில் அறுவடை செய்ததை சந்தைப்படுத்துவதில் மேலும் மேலதிகமானதை களஞ்சியப் படுத்துவதில் என பல பிரச்சினைகளை மேலதிகமாக எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது.

நடப்பு நிலைமைகளுக்கேற்ற எதிர்வு கூறல்கள் வெளிப்பட வேண்டும் என பலரும் அங்கலாய்க்கின்ற இந் நேரத்தில் இத்தகைய எதிர்வு கூறல்கள் பாரிய தகவல் திரட்டல் மற்றும் அவற்றை ஆய்ந்தறிந்து கால நிலையின் தன்மையை மக்களுக்கு முன் கூட்டியே தெரிவிப்பதன் மூலம் அவர்களை தயார்ப்படுத்துவதற்கும் தயார் நிலையில் இருப்பதற்கும் அனைத்தும் இணைந்த கால நிலை மாற்றத்திற்கான நிலையமொன்று வட பகுதியில் நிறுவப்படல் வேண்டும். இதில் வேண்டிய தொழினுட்ப வசதிகளுடனிணைந்த அனைத்து துறைசார் நிபுணர்களையும் ஒன்றிணைந்த குழு உருவாக்கப்பட்டு மக்களுக்கு தேவையான நம்பகமான துல்லியமான எதிர்வு கூறல்களை முன்னெடுக்க வேண்டும் என பரிந்துரைக்கப்பட்டிருக்கின்றது.

எமது தேசத்தின் உணவுப் பாதுகாப்பினையும் ஊட்டச்சத்து பாதுகாப்பினையும் கருத்தில் கொண்டு இத்தகைய நிலையத்தின் உருவாக்கத்திற்கு அனைவரும் முன்வருவோம். எம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளும் செயன் முறை மூலம் பேரிடர்களிலிருந்து எமது மக்களை காப்பாற்றும் பொறுப்பு எமக்கானது என்பதனை கருத்தில் கொள்வோம்.




தெரியப்படுத்தல் என்பனவற்றுடன் தேவையான கணனி சார் தகவல்களை அனைத்து மட்டத்திலிருந்தும் பெற்று அதனை பயன்படுத்தி கால நிலைமாற்றத்திற்கான தகவல்களை துல்லியமாக அந்தந்த பகுதி சார்ந்த மக்களுக்கு முன்கூட்டியே தெரியப்படுத்தல் வேண்டும்.

அந்த வகையில் ஊடகங்கள் மற்றும் இணைய வழி தகவல்களையும் மொபைல் தொழிநுட்பத்தினூடாக மக்களுக்கு விரைந்து தெரியப்படுத்தும் செயலிகள் பிறநாடுகளில் இருப்பதனை சுட்டிக்காட்டி அவற்றை அனைத்து நாடுகளிலும் செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல், கற்றல் செயற்பாடுகளில் அனைத்து மட்டத்திலும் இதற்கான கற்றல் பாடங்களை உருவாக்குதல், அவற்றை துறைசார் நிபுணர்களைக் கொண்டு மக்களுக்கு

---



# இன்று ஒரு தகவல்

104

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## தலைமுறை இடைவெளி

தாத்தா கூப்பிடுகிறார். என்னவென்று போய் கேளு அப்படி என்றார் அம்மா. அவர் அப்படித்தான் கூப்பிட்டுக் கொண்டு இருப்பார். வேறு வேலை இல்லை! வேணும் என்றால் நீ போய் கேளு என்றான் பையன். அந்த பையனை மெதுவாக கூப்பிட்டு ஏனப்பா பெரியவங்கள் கூப்பிட்டால் போய் என்ன என்று கேட்க வேண்டும் அது தான் மரியாதை என்று அட்வைஸ் செய்தேன்.

அவன் உடனே திரும்பிக்கொண்டு எனக்கு அட்வைஸ் செய்ய ஆரம்பித்து விட்டான். விபரம் தெரியாமல் பேச வேண்டாம் சேர். எங்களுடைய தாத்தாவிடம் போய் பேசி பார்த்தால் தெரியும் என்றான். ஏனப்பா இப்படி சொல்லுகிறாய் என்றேன். பின்பு என்ன சேர் எப்போது பார்த்தாலும் நான் 1940 இல் மைசூரில் வேலை பார்த்துக் கொண்டிருந்த போது என்று ஆரம்பிக்கிறார். வரிக்கு வரி மாத்தாமல் அப்படியே ஒப்புவிக்கிறார். எத்தனை தடவை தான் சார் அதை பொறுமையாக உட்கார்ந்து கேட்பது என்று சொல்லி ரொம்ப அலுத்துக் கொண்டான் பையன்.

நான் உடனே இப்போது அட்வைஸ் தேவைப்படுவது பையன்களுக்கு இல்லை தாத்தாக்களுக்கு என்று புரிந்து கொண்டேன். அதனாலே தான் தாத்தாக்களுக்கு என்று இன்றைக்கு இந்தத் தகவலை சொல்ல ஆரம்பித்தேன்.

வேறு ஒன்றுமில்லை இப்போது காலம் ரொம் வேகமாக மாறிக் கொண்டு வருகுது. அதனாலே உங்க காலத்திலே நடந்த விடயங்களையே திரும்பத் திரும்ப பேசி பெருமையடித்துக் கொண்டிருக்காதீர்கள். அதை இந்தக் காலத்துப் பிள்ளைகளால் எல்லாம் ரொம்ப நேரத்துக்கு சகிக்க முடியாது. எப்போதும் நீங்கள் பேசிக் கொண்டிருக்க வேண்டாம். உங்களுடைய வீட்டிலே இருக்கின்ற மற்றவர்களைப் பேச விடுங்கள். அவர்கள் சொல்வதைக் கேட்டு அதற்கு தகுந்தபடி யோசனைகளை சொல்லிக் கொண்டிருங்கள். நீங்கள் ஒரு அட்வைசராக இருக்க வேண்டுமே தவிர அறுவையாக இருகக் கூடாது.

வீட்டிலே நடக்கின்ற எல்லா காரியங்களிலும் கலந்து கொள்ளுங்கள். ஆனால் எதுலையும் தலையிட வேண்டாம் யாரையும் கண்டிக்க வேண்டாம் கேலி பண்ணி வேண்டாம் நீங்கள் வாலிப வயதிலே ஒரு பெரிய உத்தியோகத்தில் இருந்திருக்கலாம். பல பேர் உங்கள் உத்தரவுக்கு உடனடியா கீழ்ப்படிந்து இருக்கலாம். ஓய்வுபெற்றதற்கு பின்பு வீட்டிலே உள்ளவர்களிடம் அதே மாதிரி உத்தரவு போட்டுக் கொண்டிருந்தால் பழைய மாதிரி மரியாதையை நீங்கள் எதிர்பார்க்க முடியாது.

அதிகார தோரணையெல்லாம் ஓய்வு பெற்ற கையோடு விட்டு விடுங்கள். அதற்குப் பின்பு எல்லாரிடமும் ரொம்பவும் பணிவாக பேசுவதற்கு பழகிக் கொள்ளுங்கள். பின்பு பாருங்கள் மரியாதை தானகவே உயரும்.

பணி ஓய்வு என்பது நீங்கள் பார்த்துக் கொண்டிருந்த பணியிலிருந்து ஓய்வு என்று தான் அர்த்தம் அதற்காக அதனுடன் நீங்களே ஒய்ந்து கொண்டீர்கள் என்று அர்த்தம் இல்லை. அதற்குப் பிறகு உங்கள் வீட்டுக்கு காரியங்களில் அதிகமாக அக்கறை செலுத்த வேண்டும். பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் கடைசி வரைக்கும் நாம் உபயோகமாக இருக்க வேண்டும் என்று நினைக்க வேண்டம்.

நான் ஒய்வு பெற்று விட்டேன். இனிமேல் நமது பிள்கைள் நம்மை காப்பாற்றும் அப்படி என்று அசட்டுத்தனமாக யாரும் நினைத்து விடக்கூடாது. அதுதான் நடைமுறை எப்படி இருக்கு என்று நாளுக்கு நாள் பார்த்துக் கொண்டிருக்கின்றேமே. அப்புறமும் அப்படி ஒரு நினைப்பு வரலாமா? காய்கறி வாங்குவது, பேரப்பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பது அப்படி ஏதாவது செய்து கொண்டிருக்கலாம்.

இந்தக் காலத்து பிள்ளைகள் விருப்பமே வேறு. உங்கள் பேர்த்தி தலை முடி வெட்டிக் கொள்வதற்கு ஆசைப்படலாம். அவளிடம் போய் பின்னல் தான் பின்ன வேண்டும் என்று சண்டை போட்டு கொண்டி ருக்கக் கூடாது. உங்களுக்கு பின்னல் பின்ன வேண்டும் என்று ஆசையிருந்தால் அதை பாட்டிடம் சொல்லுங்கள் யாரு வேண்டாம் என்பார்கள்? இன்னொரு முக்கியமான விடயம் உங்களுக்கு வயதாகி விட்டது என்பதற்காக உங்களுடைய ஆடை விடயத்தில் கவனமில்லாம் இருக்க வேண்டாம்.

தாடியும் மீசையுமாக இருக்க வேண்டாம். இளமையில் எப்படி இருந்தீர்களோ அதே மாதிரி நல்லா ஆடை அணிந்து சுத்தமாக இருங்கள். பாட்டியே பார்த்து அசந்து போற அளவுக்கு இருக்க வேண்டும். இப்போதும் கூட பல வயதான தம்பதிகள் எவ்வளவு சந்தோசமாக இருக்கிறார்கள் தெரியுமா?


நான் ஒரு நாள் ஒரு வயதான பெரியவரைப் பார்க்கப் போயிருந்தேன். அவருக்கு 86 வயது. இந்த வயதிலையும் ரொம்ப உற்சாகமாக இருக்கின்றார். நான் சும்மா கிண்டலுக்காக அவரிடம்ஏன் தாத்தா நீங்கள் இப்போது கூட ஒரு கல்யாணம் செய்து கொள்ளலாம் என்ன? என்றேன்.

அவர் உடனே பதறி போய் விட்டார். நான் பயந்து போய் ஏன் தாத்தா நான் ஏதும் தப்பாக சொல்லி விட்டேனா என்றேன்.

நீ ஒன்றும் தப்பாக சொல்லவில்லை. சரியாகத் தான் சொன்னாய். நான் பயந்து போனதற்கு காரணம் நீ சொன்னது எங்கே வீட்டுக்குள்ளே இருக்கும் பாட்டி காதிலே விழுந்து விட போகிறது என்பதாற்காகத் தான் என்றார் அந்த தாத்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுணவு பதப்படுத்தல் தொழிற்சாலைகளில் பரிசோதனை



(யாழ்ப்பாணம்)

பூநகரி பள்ளிக்குடாப் பகுதியில் கடலுணவு கொள்வனவு மற்றும் பதப்படுத்தலில் ஈடுபடும் தொழிற்சாலைகள் திடீர் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டன.

பொது சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தலைமையிலான பொது சுகாதார பரிசோதகர் குழுவினரால் இப்பகுதியில் இயங்கி வரும் ஆறு தொழிற்சாலைகள் உணவுப் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் சுகாதாரக் கண்காணிப்புப் பரிசோனைகளுக்கு உட்படுத்தப்பட்டன.

பூநகரி பள்ளிக்குடாப் பகுதியில் அதிகளவான கடலுணவு கொள்வனவு மற்றும் பதப்படுத்தல் மேற்கொள்ளும் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன.

இவை சரியான வகையில் உணவுப் பாதுகாப்பு முறைகள், தொழிலாளர் பாதுகாப்பு, சுற்றாடல் சுகாதாரம் என்பவற்றைக் கடைப்பிடித்து இயங்குகின்றனவா என பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது பயன்படுத்தப்பட்ட கழிவு நீர் உரிய வகையில் பரிசோதிக்கப்பட்டே கடலுக்குள் விட வேண்டுமெனவும்,

உணவு பதனிடும் போது தொற்றுக்கள் ஏற்படுவதைத் தடுக்கும் முறைகள் குறித்தும் தொழிலாளர் பாதுகாப்பு குறித்தும் அறிவுறுத்தப்பட்டது. (நி)

# லொறி-ஆட்டோ மோதி விபத்து ஒருவர் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரை அண்மித்த ஆறுகால்மட சந்தியில் நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் இடம்பெற்ற விபத்து ஒன்றில் முச்சக்கரவண்டி ஒன்று பட்டாரக வாகனத்துடன் விபத்துக்குள்ளாகி முற்றாக சேதமடைந்ததோடு முச்சக்கர வண்டி சாரதி படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் - மானிப்பாய் - காரைநகர் பிரதான வீதியில் ஆறுகால்மடம் சந்தியில் அமைந்துள்ள அரைக்கும் ஆலை ஒன்றில் இருந்து பிரதான வீதியில் முச்சக்கர வண்டி பயணிக்க தொடங்கிய நிலையில் பின்புறமாக ஆறுகால்மடம் பகுதியில் இருந்து வருகைதந்த பட்டாரக வாகனம் மோதியது.

இதன் போது முச்சக்கர வண்டி முற்றாக சேதமடைந்தது. முச்சக்கரவண்டியினை செலுத்திய ஆறுகால்மடம் பகுதியினை சேர்ந்த 20 வயதான இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இதேவேளை பட்டாரக வாகனம் இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான மின்கம்பத்துடன் மோதி பகுதியளவில் சேதமடைந்த நிலையில் வாகன சாரதி காயங்களின்றி மீட்கப்பட்டார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த யாழ்.மாவட்ட போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி)

# வவுனியாவில் இளங்கோ அடிகளாரின் நினைவு தினம் அனுஸ்டிப்பு



(யாழ்ப்பாணம்)

சித்திரை முழுநிலா தினமான நேற்று வவுனியா கோவில்குளம் சிவன் கோவிலுக்கு அருகிலுள்ள இளங்கோ அடிகளாரின் சிலையடியில் அவரது நினைவுதினம் அனுஸ்டிக்கப்பட்டது.

வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் செ.சந்திரகுமார் தலைமையில் குறித்த நிகழ்வு நடைபெற்றதுடன், அடிகளாரின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. அடிகளார் தொடர்பான சிறப்புரைகளும் இடம்பெற்றிருந்தன.

இந்நிகழ்வில் வவுனியா நகரசபை செயலாளர் அ.பாலகிருபன், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன், முன்னாள் நகரசபை உறுப்பினர் சுமந்திரன், இந்து அன்பக சிறுவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (நி-250)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3098

வசி





கம்சிகா





கணேஸ்




காவேரி




நரேஷ்




நந்தினி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 463





இனி அந்த மரக்கலத்தைத் தொடர்ந்து போய்ப் பிடிக்க முடியாது என்ற தீர்மானத்துக்கு அவர்கள் வந்திருந்தார்கள். ஆகையால் தொண்டைமானாற்றின் சங்கமத்துக்குப் போய்ப் பார்க்க அவர்கள் எண்ணினார்கள்.

இன்னொரு கப்பல் அங்கே இருக்கலாம். அதில் ஒரு வேளை இன்னும் இளவரசர் இருக்கலாம். எப்படியும் ஏதாவது செய்தியாவது கிடைக்கும் அல்லவா?

படகுக்காரனைக் கேட்டுப் பார்த்தார்கள். அவனிடமிருந்து ஒரு விவரமும் தெரியவில்லை. "படகில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தேன். அதிகாலையில் யாரோ வந்து தட்டி எழுப்பினார்கள். கப்பலில் கொண்டுபோய் விட்டால் நிறையப் பணம் தருவதாகச் சொன்னார்கள் நீங்கள் விழித்தெழுவதற்குள் திரும்பி வந்து விடலாம் என்று போனேன், வேறொன்றும் தெரியாது" என்றான்.

மேலே கண்ட வரலாறுகளில் ஆழ்வார்க்கடியான் தான் அறிந்த வரையில் ஒன்று விடாமல் இளவரசரிடம் கூறினான்.

பின்னர், "இளவரசே! வந்தியத்தேவன் கடலில் குதித்துப் பாய்ந்து சென்றபோது அவனைத் தொடர்ந்து நானும் போகலாமா என்று முதலில் நினைத்தேன். ஆனால் எனக்குக் கடல் என்றால் எப்போதுமே சிறிது தயக்கம் உண்டு நன்றாக எனக்கு நீந்தத் தெரியாது. அத்துடன், அதோ போகிறதே அந்தக் கப்பலைப் பற்றியும் எனக்குச் சிறிது சந்தேகம் ஏற்பட்டது. அதில் தாங்கள் ஏறிப் போவது சாத்தியமில்லை என்று தோன்றியது.

இன்னும், அந்தக் கப்பல் சோழ நாட்டுக் கப்பலாயிருக்க முடியுமா என்ற ஐயமும் உண்டாயிற்று. இதைப் பற்றிச் சேனாதிபதியிடமும் கூறினேன். இருவரும் இங்கே வந்து பார்த்து முடிவு செய்வது என்று தீர்மானித்துக் கொண்டு வந்தோம். தங்களைப் பார்த்த பிறகுதான் எங்கள் மனம் நிம்மதி அடைந்தது"! என்றான்.

ஆழ்வார்க்கடியான் கூறியதையெல்லாம் கவனமாகக் கேட்டுக் கொண்டு வந்து அருள்மொழிவர்மர், "ஆனால் என் மனத்தில் நிம்மதி இல்லை, திருமலை! வந்தியத்தேவன் அந்தக் கப்பலில் போகிறான். அவனைப் பழுவேட்டரையர்கள் பிடித்துப் பாதாளச் சிறையில் தள்ளி விடுவார்கள்!" என்றார்.

அப்போது சேனாதிபதி, "இளவரசே! அந்தக் கொடியவர்களின் அதிகாரத்தை எதற்காகப் பொறுத்திருக்க வேண்டும்? தாங்கள் மட்டும் சம்மதம் கொடுங்கள். அடுத்த பௌர்ணமிக்குள் பழுவேட்டரையர்களின் அதிகாரத்தைத் தீர்த்துக் கட்டி அந்தப் பாதாளச் சிறையில் அவர்களையே அடைத்து விட்டு மறுகாரியம் பார்க்கிறேன்" என்றார்.

"ஐயா! என் தந்தையின் விருப்பத்துக்கு விரோத மாக நான் அணுவளவும் நடந்து கொள்வேன் என்று தாங்கள் கனவிலும் எதிர்பார்க்க வேண்டாம்!" என்றார் இளவரசர்.

இந்தச் சமயத்தில் குதிரை ஒன்று வேகமாக வரும் சத்தம் கேட்டு எல்லாரும் திரும்பிப் பார்த்தார்கள். சற்றுத் தூரத்திலேயே அந்தக் குதிரை நின்றது. முகக்கயிறு, உட்கார ஆசனம் ஒன்றுமில்லாமல் அந்தக் குதிரை மேல் ஏறி வந்தவள் ஒரு ஸ்திரீ என்று அறிந்ததும் அனைவரும் வியப்படைந்தார்கள்.

### நாற்பத்தெட்டாம் அத்தியாயம்
### "கலபதி"யின் மரணம்

குதிரை மீது வந்த பெண்மணி யார் என்பது இளவரசருக்கு உடனே தெரிந்து போயிற்று. குதிரை நின்ற இடத்தை நோக்கி அவர் விரைந்து சென்றார். அவருடன் பூங்குழலியும் போனாள். மற்றவர்களும் சற்று தூரத்தில் தயங்கித் தயங்கிப் போனார்கள்.

ஊமை ராணி அதற்குள் குதிரையிலிருந்து இறங்கி விட்டாள். பின்னால் கூட்டமாக வந்தவர்களைச் சற்றுக் கவலையுடன் பார்த்து விட்டுப் பூங்குழலியிடம் சமிக்ஞை பாஷையில் ஏதோ சொன்னாள்.

"பெரியம்மா காட்டில் ஏதோ அதிசயத்தைப் பார்த்திருக்கிறாள். அந்த இடத்துக்கு நம்மை வரும்படி அழைக்கிறாள்!" என்றாள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## எதிர்பாராத விடயங்களை எதிர்கொள்



ஒரு காட்டுக்குள்ள இரண்டு அணில்கள் நண்பர்களாக வாழந்து வந்துச்சாம், ஒன்னு பேரு புத்தி, இன்னொன்னு பேரு மத்தி, புத்தி எப்போதும் கடவுள் பக்தியோட இருப்பானாம், மத்தி அதுக்கு அப்படியே எதிர்மறையான எண்ணம் உள்ளவன், அதாங்க கடவுள் நம்பிக்கை இல்லாதவன்.

எப்போதும் புத்தி கடவுளுக்கு நன்றி சொல்லிகிட்டே இருப்பான், எதாவது நன்மை நடந்தாலும் தீமை நடந்தாலும் எல்லாம் நன்மைக்கேன்னு கடவுளுக்கு நன்றி சொல்வானாம்.

ஏதோ ஒரு நன்மை நமக்கு இருக்குன்னு சொல்லிட்டு தனக்கு தானே சமாதானம் செய்து கொண்டு போயிடுவானாம்.

நம்மையும் மீறி ஏதோன்னு நடக்குதுன்னு புத்தி எப்போதும் நம்புவான். அதை பார்த்து மத்தி கேலி பண்ணி ஏளனமாய் சிரிப்பானாம்.

உன்னை மீறி வாழ்க்கையில என்னடா நடக்கப்போகுது. நீ என்ன நினைக்கிறியோ அது தான் வாழக்கையிலும் நடக்குமுன்னு மத்தி சொல்லிகிட்டே இருப்பானாம்.

ஒரு நாள் ரெண்டு பேரும் ஒரு அழகான காட்டுக்குள்ள பழங்களை பறித்து தின்ன போனார்களாம், இங்கேயும் அங்கேயும் ஓடியாடி அந்த மரத்துல விளையாடி கொண்டிருந்தார்களாம், எதிர்பாராத விதமா புத்தி கீழே விழுந்துவிட்டான், முதுகில் பலத்த அடி, சின்னதா ஒரு காயமும் கூட, வலி தாங்காம முதுகுல தேய்ச்சுகிட்டு, ஏதோ ஒரு நல்லதுக்கு தான் நாம கீழே விழுந்துட்டோம், நல்லவேளை நமக்கு பெருசா எதுவும் அடி படலை... எல்லாம் நமைக்கேன்னு சொல்லிட்டு அடிபட்ட இடத்தில தேய்த்து கொண்டிருந்தான், நன்றி கடவுளே தலைக்கு வந்தது தலை பாகையோட போச்சுன்னு சொல்லிட்டு மேல பார்த்தானாம்.

புத்தி விழுந்ததை பார்த்து மத்தி கெக்கே.... கெக்கேன்னு சிரித்து கொண்டு ஏளனமாய் கேலி செய்தானாம், நீ ஒழுங்கா மரத்தை பிடிக்காம கவனக்குறைவா விழுந்ததுக்கு ஏன்டா கடவுளுக்கு நன்றி சொல்றேனுக்கு கேலி செய்தானாம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நம்பிக்கை எனும் கண்கொண்டு பார்க்க வேண்டுமானால் பகுத்தறிவுக் கண்ணை மூடிக்கொள்ள வேண்டும். - ஃபிராங்க்லின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கடவுளைக் கைவிட்டாலும் அறத்தைக் கைவிடாதீர்கள்

கடவுள் இருக்கிறாரா என்று ஒரு பிரபலமான நடிகரிடம் ஒரு செய்தியாளர் வினாவினார்.

அதற்கு அந்த நடிகர்; கடவுள் இருக்கிறாரா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் கடவுள் இருந்தால் நல்லா இருக்கும் எனப் பதிலளித்திருந்தார்.

இந்தப் பதில் பின்னாளில் அதே நடிகர் கதாநாயகனாக நடித்த திரைப்படத்திலும் வெளிவந்திருந்தது.

ஆக, கடவுள் என்பது நம்பிக்கை சார்ந்தது. கடவுள் இருக்கிறார் என பெரும்பகுதியினர் நம்புகின்றனர். ஒரு சிறு பகுதியினர் கடவுள் இல்லை எனக் கருதுகின்றனர்.

இங்குதான் கடவுள் இருக்கிறார் என நம்புகின்றவர்களை ஆஸ்திகர் என்றும் கடவுள் இல்லை என்று கூறுபவர்களை நாஸ்திகர் என்றும் அழைக்கின்றோம்.

இங்கு கடவுள் உண்டு; இல்லை என்று கூறுகின்ற இரு தரப்பையும் அந்தக் கடவுள் தான் படைத்தான்.

அப்படியானால், கடவுள் இல்லை என்று கருதவல்லவர்களை அந்தக் கடவுள் ஏன் படைத்தான் என்று எண்ணுகின்றபோது தான், தன்னை நினைக்க வேண்டும் என்பதற்காக கடவுள் மனிதர்களைப் படைக்கவில்லை என்ற உண்மை உணரப்படும்.

மாறாக, கடவுள் என்ற நம்பிக்கையினூடாகப் பாவத்தைச் செய்யாமலும் புண்ணியத்தைச் செய்வதற்குமாகவே கடவுள் தன்னை வெளிப்படுத்துகின்றான்.

அதாவது தன்னை நம்ப வேண்டும் என்ற தேவை கடவுளுக்கு அறவேயில்லை. விருப்பு வெறுப்பு அற்ற இறைவன், வழிபாட்டால் வயப்படுபவனல்ல.

இதை நாம் கூறும்போது இஃதென்ன என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

ஆனால் கடவுள் தன்னை வழிபடுகின்றார் என்பதற்காக அவரை ஒருபோதும் இரட்சிப்பதில்லை.

மாறாக, யார் அறத்தை – தர்மத்தைப் பின்பற்றுகின்றாரோ – யார் பிறர்க்குத் தீங்கிழைக்காமல் வாழ்கின்றாரோ – யார் பிறர்க்கு உதவுகின்றாரோ – யார் மற்றவர்கள் வாழ வேண்டும் என்பதற்காக வாழ்கின்றார்களோ அவர்கள் மீதுதான் கடவுளின் கருணை பாய்ச்சப்படும்.

ஆம், கடவுளை ஏற்பவர் ஏற்காதவர் என்ற பிரிவை அங்கீகரித்த ஞானிகள் அறத்தை ஏற்பவர் ஏற்காதவர் என ஒருபோதும் வகுக்கவில்லை.

அதற்குக் காரணம். அறம் அனைவர்க்கும் பொதுவானது. அதில் இருந்து எவரும் விலக முடியாது.

ஆம், அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பது உண்மைத் தத்துவம்.

கடவுள் அறத்தின் வடிவானவன். அதனாலேயே கடவுளை வணங்குகின்றோம்.

கடவுளை வழிபடுவதென்பது இறைவா! அறத்தினின்றும் என்னை விலகாதிருக்க காத்தருளும். அறம்தான் என் வாழ்வு. அறத்தை மீறினால் அதுவே ஊழ்வினையாய் வந்துறுத்தும்.

ஆகையால் அறத்தை – தர்மத்தை மீறாதிருக்க என்னைக் காத்தருளும் என்பது தான் பிரார்த்தனையின் பொருளாகும்.

இந்த உண்மையை உணர்ந்து சேவையாற்றாவிடில், இந்த மண்ணில் மக்கள் துன்புறுவர். இயற்கை மாறு கொள்ளும் இதுவே உண்மை என்றுணர்க.

# புற்றுநோய்க்கான சிறந்த மருந்து தூக்கம் ஆய்வில் வெளியான முக்கிய தகவல்

(கொழும்பு)

**உலகளாவிய ரீதியில் மிக வேகமாக பரவி வரும் நோய்களில் ஒன்றாக தற்போது புற்றுநோய் பதிவாகியுள்ளது. இந்த நோய் ஏற்படுவதற்கு பல காரணங்கள் இருந்தாலும், சரியான தூக்கமின்மை புற்றுநோய் ஏற்படுவதற்கான முதன்மையான காரணியாக அமைந்துள்ளதென அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.**

சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் மனிதர்கள் தூங்கிய சராசரி நேரத்தைவிட, இன்றைய மனிதர்கள் ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் குறைவாக தூங்குகிறார்கள்.

போதுமான தூக்கமின்மை காரணமாக இதயநோய், நீரிழிவு நோய், உடல் பருமன், தொற்றுநோய்கள் மற்றும் புற்றுநோய் கூட ஏற்படலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

பகல் நேர தூக்கத்தை தவிர்த்து நாளொன்றுக்கு 6 மணி நேரத்திற்கும் குறைவாக இரவு தூங்கும் நபர்களுக்கு புற்று நோய் ஏற்படும் அபாயம் அதிகம் காணப்படுவதாக ஆய்வில் கண்டறியப்பட்டது.

இந்த புற்றுநோயைக் கட்டுப்படுத்த தூக்கம் என்பது முக்கிய காரணி ஆகும். மெலடோனின் என்பது பினியல் சுரப்பி மூலம் மூளைக்கு வெளியிடப்படும் ஹார்மோன் அமைதியான தூக்கத்தை ஊக்குவிக்க, மக்கள் அதை இயற்கையான அல்லது செயற்கையான துணைப் பொருளாகவும் எடுத்துக் கொள்ளலாம்.

உடலில், மெலடோனின் பல செயற்பாடுகளைச் செய்கிறது. ஆனால் இது முக்கியமாக சர்க்காடியன் ரிதங்களை பாதுகாப்பதில் குறிப்பிடத்தக்கது.

சர்க்காடியன் ரிதம் என்பது உடலின் உள் கடிகாரம். எப்போது தூங்க வேண்டும், எப்போது எழுந்திருக்க வேண்டும் என்பதை இது உடலுக்கு அறிவுறுத்துகிறது. இது புற்றுநோய் எதிர்ப்பு ஹார்மோன் கூட ஆகும்.

இரவு உறங்க செல்ல உகந்த நேரம் இரவு 10 - 11 மணி வரை என நிபுணர்கள் கருதுகிறார்கள். இரவு நேரத்துடன் தூங்கி காலை சூரிய உதயத்தின் போது சீக்கிரமே எழுவது உடலின் இயற்கையான சர்க்காடியன் ரிதமை சீராக்க வைக்க உதவி, ஆரோக்கியமான தூக்கம், விழிப்பு சுழற்சியை உறுதி செய்கிறது.

இது புற்றுநோயிலிருந்து மட்டுமல்லாது ஏனைய நோய் களிலிருந்தும் உடலை காக்கக்கூடியது என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## குறைவடைந்த பணவீக்கம்

(கொழும்பு)

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் படி இலங்கையில் பணவீக்கம் மார்ச் மாதத்தில் 2.5 வீதமாக குறைவடைந்துள்ளது.

குறித்த விடயத்தை மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் படி கடந்த பெப்ரவரி மாத பணவீக்கம் 5.1 வீதமாக இருந்தது. அதன் படி மார்ச் மாத பணவீக்கம் 2.6 வீதத்தால் குறைந்துள்ளது.

அத்தோடு, பெப்ரவரியில் 5.0 வீதமாக காணப்பட்ட உணவு வகையின் பணவீக்கம் மார்ச் மாதத்தில் மாற்றமில்லாமல் காணப்படுகிறது.

மேலும், பெப்ரவரியில் 5.1 வீதமாக இருந்த உணவு அல்லாத வகையின் பணவீக்கம் மார்ச் மாதத்திற்குள் 0.7 வீதமாக குறைந்துள்ளதாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (நி)

## பாடசாலை கற்றல் செயற்பாடுகள் இன்று ஆரம்பம்-கல்வி அமைச்சு

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டுக்கான பாடசாலை தவணைக்கான இரண்டாம் கட்டம் இன்று ஆரம்பமாகிறது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி மே 3 ஆம் திகதி வரை இந்த கல்வி செயற்பாடுகள் இடம்பெறவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, கல்விப் பொதுத் தராதர 2023/ 2024 ஆண்டுக்கான பரீட்சை எதிர்வரும் மே மாதம் 6 ஆம் திகதி ஆரம் பமாகி மே மாதம் 15 ஆம் திகதி வரை நடை பெறவுள்ளது.

மேலும் இந்த ஆண்டுக்கான இரண்டாம் பாடசாலை தவணை மே 20 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## ஆசிரியர் வெற்றிடங்களுள் ஆட்சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சை அடுத்த வாரத்தில் -கல்வி அமைச்சு

(கொழும்பு)

தேசிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களுக்குப் பட்டதாரிகளை நியமிப்பதற்கான, நேர்முகப் பரீட்சைகளை எதிர்வரும் வாரங்களில் நடத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் தேசிய பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை நியமிப்பதற்காக கடந்த மார்ச் மாதம் 2 ஆம் திகதி போட்டிப் பரீட்சையொன்று நடத்தப்பட்டது.

இந்தப் போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய எதிர்வரும் 29ஆம் திகதி முதல் மே மாதம் 9ஆம் திகதி வரை கல்வி அமைச்சில் ஆட்சேர்ப்புக்கான நேர்முகப் பரீட்சைகளை நடத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு தகுதியான விண்ணப்பதாரர்களின் பட்டியல் மற்றும் அழைப்புக் கடிதம் என் பன கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## இன்று கூடுகிறது பாராளுமன்றம்

(கொழும்பு)

தமிழ் சிங்கள புத்தாண்டின் பின்னர் முதல் தடவையாக பாராளுமன்றம் இன்று கூடவுள்ளது.

இந்நிலையில் குற்றவியல் நடைமுறைச் சட்டத் திருத்தச் சட்டமூலம் மற்றும் அபாயகரமான போதைப்பொருள் கட்டளைச் சட்டத்தின் கீழான உத்தரவுகளின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நடைபெறவுள்ளது.

மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஒத்திவைப்பு வேளை விவாதம் நாளை, நாளை மறுதினம் நடைபெறவுள்ளதாகவும் பாராளுமன்ற தகவல் தொடர்பு திணைக்களம் அறிவித்துள்ளது. (நி)

## நீதிபதி இளஞ்செழியனுக்கு நீதிமன்றம் அழைப்பாணை

நல்லூர் சந்தியில் நீதிபதி இளஞ்செழியன் மற்றும் பொலிஸ் மெய்ப்பாதுகாவலர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோக வழக்கு தொடர்பில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிபதி இளஞ்செழியனுக்கு அழைப்புக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மேல் நீதிமன்றம் இந்த அழைப்புக் கட்டளையைப் பிறப்பித்துள்ளது.

இதன்படி இன்று புதன்கிழமை நீதிமன்றில் சாட்சியம் அளிக்க முன்னிலையாகுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த 22.07.2017 அன்று நல்லூர் சந்தியில் நீதிபதி இளஞ்செழியன் மற்றும் பொலிஸ் மெய்ப்பாதுகாவலர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் அவரின் மெய்ப்பாது காவலர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.(ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருத்துவ பொன்விழாக் காணும் யாழ் மறைமாவட்ட ஆயர்



யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் புதிய ஆயராக மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை நவம்பர் மாதம் 28 ஆம் திகதி 2015 ஆம் ஆண்டு யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றது. மரியன்னை வழி இயேசுவிடம் என்னும் விருதுவாக்குடன் தன் பணியைத் தொடங்கினார்.

### ஆயரின் பணிகளை விளக்கும் பணி விளக்க சின்னம்

ஒரு ஆயர் தன் மறைமாவட்டத்தில் தான் ஆற்றப் போகும் பணிகளை விளக்கும் பணி விளக்க சின்னத்தைத் தயாரிக்கிறார். இந்த பணி விளக்க சின்னமானது ஒரு ஆயர் வகிக்கும் பதவி நிலையையும் அவர் முன்னுரிமைப்படுத்தும் பணிகளையும் கோடிட்டுக் காட்டுகிறது. பணி விளக்க சின்னத்தில் மேலே அமைக்கப்பட்டுள்ள பச்சை நிறத் தொப்பியானது 1870 ஆண்டு முதல் அணியப்பட்டு வந்த பாரம்பரியத்தையும் ஆயரின் பதவி நிலையையும் குறித்துக் காட்டுகிறது. அதில் இருந்து தொங்கும் மூன்று தொகுதிக் குஞ்சங்கள் இவர் தியாக்கோன் பட்டத்தையும் குருப்பட்டத் தையும் பெற்று இப்போது ஆயர்ப் பட்டத்தைப் பெறுகிறார் என்பதைக் குறித்து நிற்கிறது. சின்னத்தில் தோன்றும் புறா தூய ஆவியையும் மரியன்னை அன்புப் பாதுகாவலையும் தெரிவித்து நிற்கிறது. பனைமரம் தன்னை முழுவதும் அர்ப்பணிப்பது போல் மேதகு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையும் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கக் காத்திருக் கிறார் என்பதையும் யாழ்ப்பாணத்தை குறிக்கும் யாழானது யாழ் மண்ணின் பாரம்பரியத்தையும் சரித்திரத்தையும் பாதுகாக்க உறுதி பூண்டுள்ளார் என்ப தையும் சொல்லி நிற்கிறது. மரியன்னை வழி இயேசுவிடம் - என்னும் விருது வாக்குடன் தன் பணியைத் தொடங்கும் இவர் அன்னை மரியாள் வழி அனைத்தையும் வழிநடத்தப் போகிறார் என்பதைக் காட்டுகிறது.

1974ஆம் ஆண்டு தமது 25 வது வயதில் யாழ் மறைமாவட்ட முன்னாள் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையால் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு 1999 ஆம் ஆண்டு தமது குருத்துவ வெள்ளி விழாவைக் கொண்டாடிய இவர் குருத்துவ பொன்விழாவை 24 ஏப்ரல் 2024 அன்று கொண்டாடுகிறார்.

### பணிப் பயணப்பாதை

கலாநிதி மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை 2007 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு யாழ் ஆயர் நியமனத்தைப் பெறும்வரை 8 ஆண்டுகள் யாழ்.மறைமாவட்டத்தின் குருமுதல்வராகப் பணியாற்றியவர். 2008 - 2015 காலப் பகுதியில் குரு முதல்வர்ப் பணியோடு கத்தோலிக்க அச்சக அதிபராகவும் பணியாற்றியுள்ளார்.

குருத்துவப்பணியில் 50 ஆண்டுகளை 2024 ஆம் ஆண்டு நிறைவு செய்துள்ள ஆண்டகை தனது பணிக் காலத்தின் 31 ஆண்டுகளை கல்விப் பணியிலே - குறிப்பாக இளவாலை புனித கென்றி அரசர் கல்லூரியிலும் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் - ஆற்றி 2001 ஆம் ஆண்டு கல்விப் பணியில் 25 ஆண்டுகளை நிறைவு செய்தவர்.

1976ஆம் ஆண்டு முதல் 1989 ஆம் ஆண்டுவரை இளவாலை புனித கென்றி அரசர் கல்லூரியின் உப அதிபராகவும் 1989 முதல் 2002 வரை அதன் அதி பராகவும் பணியாற்றிய இவர் அரச பாடசாலையில் இருந்து தனியார் பாடசாலைக்கு பணிமாற்றம் பெற்று 2002 முதல் 2007 வரை புனித பத்திரிசியார் கல்லூரியில் அதிபராகப் பணியாற்றியவர்.

இங்கிலாந்தில் 1986 ஆம் ஆண்டு முதல் 1988 வரை கலாநிதிப் பட்டத்தையும் 1979 ஆம் ஆண்டு முதல் 1980 வரை முதுகலைமாணிப் பட்டத்தையும் இங்கிலாந்திலேயே பெற்ற இவர் 1991 ஆம் ஆண்டு இலங்கை அதிபர் சேவையின் வகுப்பு 1 தரத்தைப் பெற்று 1990 - 1994 ஆண்டு காலப்பகுதியில் இளவாலையில் 12 அரச பாடசாலைகளின் கொத்தணி அதிபராக பணியாற்றியவர்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராக 1998 ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை பணியாற்றிய இவர் 1982 முதல் 1984 வரை யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவ நாகரிகத் துறையில் விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். 2003 ஆம் ஆண்டு முதல் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒழுங் காற்று சபைத் தலைவராகவும் - 2002 ஆம் ஆண்டு முதல் யாழ்.பல்கலைக்கழக கலாநிதி மற்றும் முதுகலைமாணிப் பட்ட மதிப்பீட்டாளராகவும் பரீட்சையாளராகவும் இன்று வரை பணியாற்றி வருகிறார். கோப்பாய் கல்வியியல் கல்லூரியின் ஆலோசனை சபை உறுப்பினராக 2003 ஆம் ஆண்டு முதல் இன்று வரை பணியாற்றி வருகிறார்.

1994ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரை இளவாலை மறைக் கோட்டத்தின் 12 பங்குகளின் முதல்வராகப் பணியாற்றிய இவர் அதே காலப்பகுதியில் யாழ்.மறைமாவட்ட ஆயரின் பேரவை அங்கத்தவராகப் பணியாற்றி பின்னர் அதே பணியை 2007 ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரை ஆற்றியவர்.

யாழ்.மறைமாவட்ட கல்வி ஆணைக் குழுவின் தலைவராக 1992 - 2002 ஆண்டு காலப்பகுதியில் பணியாற்றிய இவர் 1992 முதல் 2006 வரை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி மெய்யியற் துறையில் கல்வியியல் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். யாழ். மறைமாவட்ட கிறிஸ்தவ சமயங்களுக்கிடையிலான ஒன்றிப்பு ஆணைக் குழுவின் தலைவராக 1981 - 1986 ஆண்டு காலப்பகுதியில் பணியாற்றிய இவர் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி இறையியற் துறையில் 1984 - 1986 ஆண்டு காலப்பகுதியில் கிறிஸ்தவ சமயங்களுக்கிடையிலான ஒன்றிப்பு விரிவுரையாளராக பணியாற்றியவர். 1999 ஆம் ஆண்டு குருத்துவ வெள்ளி விழா வைக் கொண்டா டியவர்.

1974 ஆம் ஆண்டு யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் மறைந்த யாழ் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகையால் குருவாகத் திருநிலை ப்படுத்தப்பட்ட இவர் 1980 - 1985 ஆண்டு காலப் பகுதியில் மாரீசன்கூடல் பங்குத் தந்தையாகவும் 1976 - 1979 ஆண்டு காலப்பகுதியில் இளவாலை புனித அன்னாள் ஆலய உதவிப் பங்குத் தந்தையாகவும் பணியாற்றியவர். 1975 - 1976 ஆண்டு காலப்பகுதியில் உருத்திரபுரம் பணித்தளத்தில் பணியாற்றிய இவர் அன்று லோங் தொழில் நுட்ப நிறுவனம் என அழைக்கப்பட்ட மாணவர் இல்லத்தில் உதவி இயக்குனராகவும் பணியாற்றியவர். இவரின் முதல் குரு த்துவப்பணி நியமனம் 1974 ஆண்டு காலப் பகுதியில் கிளிநொச்சி - வலைப்பாடு ஆகிய பங்குகளில் அமைந்திருந்தது.

இவர் தனது இறையியல் கல்வியை 1972 - 1974 ஆண்டு காலப்பகுதியில் இந்தியா பூனே பாப்பிறை குருத்துவக் கல்லூரியில் கற்று இறையியல் இளங் கலைமாணிப் பட்டத்தை பெற்றவர். இவர் தனது மெய்யியல் கல்வியை 1966 - 1969 ஆண்டு காலப்பகுதியில் கண்டி தேசிய குருத்துவக் கல்லூரியிலும் ஆரம்ப கல்வியை ஊர்காவற்துறை புனித அந்தோனியார் மற்றும் யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரியிலும் பெற்றவர். 1948 ஆம் ஆண்டு ஊர்காவற்துறை புனித மரியன்னை ஆலயப்பங்கில் பிறந்தவர் கலாநிதி மேதகு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை யாழ் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்ட கைக்கு நிறைந்த அருள் - வழிகாட்டும் ஞானம் - நீடித்த ஆயுள் - நல்ல சுகம் - முழுமையான ஒத்துழைப்பு என்பன நிறையக் கிடைத்து அவர் நேர்மையான ஆட்சியையும் - நிறைவான பணியையும் தொடர்ந்து முழுமையாக வழங்க இறையாசீர் வேண்டுவோம்.

**கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள்**
**ஊடக வருகை விரிவுரையாளர்**
**யாழ் பல்கலைக்கழகம்- வவுனியா பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

# வடந்தை - 2024 க்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் வருடா வருடம் வெளியிடப்படும் வடமாகாண பண்பாட்டம்சங்களை உள்ளடக்கிய 'வடந்தை' நூலுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. இந்நூலில் உள்ளடக்கப்படுவதற்கான தரமான ஆக்கங்கள் எழுத்தாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆக்கங்களை 31.05.2024 இற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியவகையில் அனுப்பி வைக்குமாறு குறித்த திணைக்களத்தின் பிரதிப்பணிப்பாளர் லா.நிருபராஷ் அறிவித்துள்ளார்.

ஆக்கங்கள் அனைத்தும் வடக்கு மாகாணம் சார்ந்தாத இருப்பதுடன் அரசியல் கலப்பற்றதாக இருத்தல் அவசியம். அத்துடன் தனிப்பட்ட நபரை பாதிக்காது கருத்தக்கள் முன்வைக்கப்பட்டிருந்தல் வேண்டும்.

ஒருவர் ஒரு கட் டுரை மட்டுமே சமர்ப்பிக்க முடியும். ஆக்கமானது அவரவர் சொந்த ஆக்கமாக இருப்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும். முன்னர் எந்த பத்திரி கைகளிலோ, சஞ்சிகை களிலோ பிரசுரிக்கப்படாத ஆக்கங்களாக இருத்தல் வேண்டும்.

கணனியில் தட்டச்சு செய்யப்பட்ட மென்பிரதிகளை npc.culture@yahoo.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைப்பதுடன் அதன் வன்பிரதியினை பிரதிப்பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம், கல்வி அமைச்சு, செம்மணி வீதி, நல்லூர் எனும் அலுவலக முகவரிக்கு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ சமர்ப்பிக்கலாம்.

முடிவுத்திகதிக்கு பின்னர் கிடைக்கும் ஆக்கங்கள் நிராகரிக்கப்படும்.

"ஈழத்து நாட்டார் வழக்காற்றியல்" எனும் பிரதான தலைப்பின் கீழ் பிரதேச ரீதியான உணவுப்பழக்கவழக்கங்கள், பாரம்பரிய விளையாட்டுக்கள், கிராமிய வழிபாட்டு முறைகள், பாரம்பரி சடங்கு முறைகள் பற்றிய ஆக்கங்கள் இடம் பெறவேண்டும்.

மேலதிக தகவல்களுக்கு 021 205 4105 எனும் தொலைபேசி இலக் கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (நி)

# எரிவாயு விலையில் மாற்றம் ஏற்படலாம்

(கொழும்பு)

நாட்டில் எரிவாயு விலையில் மாற்றம் ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எரிவாயு ஏற்றுமதி செய்யும் நாடுகள் மத்தியில் நிலவி வரும் பதற்ற நிலை தணிந்தால் விலை குறையும் சாத்தியம் உண்டு என தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சர்வதேச சந்தையில் விலை குறைவடைந்தால் அந்த நலன்களை நாட்டு மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தையிட்டி...

யாழ்ப்பாணம் - தையிட்டியில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமாகி நேற்று நடைபெற்றது.

குறித்த சட்டவிரோத விகாரையை அகற்றுமாறு கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், மக்களுடன் இணைந்து தொடர்ச்சியாக ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்தவகையில் நேற்று பௌர்ணமி வழிபாடுகள் விகாரையில் இடம்பெறவுள்ள நிலையில் அதற்கு எதிர்ப்பை வெளிக்காட்டும் முகமாக இந்த போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## தலைமன்னாரிலி...

நீச்சல் வீரர்கள் நீந்திக் கடந்து சாதனை படைத்து வருகின்றனர்.

இந்நிலையில் தலைமன்னார் முதல் தனுஷ்கோடி அரிச்சல்முனை வரை நீந்திக் கடப்பதற்கு இந்திய இலங்கை இருநாட்டு அரசிடம் உரிய அனுமதி பெற்று நேற்று முன்தினம் 31 பேர் கொண்ட குழு இராமேஸ்வரத்தில் இருந்து படகு மூலம் புறப்பட்டு தலைமன்னார் சென்றடைந்தனர்.

அங்கிருந்து நேற்று அதிகாலை சுமார் 12.10 மணியளவில் கடலில் குதித்து தொடர் ஓட்டம் முறையில் நீந்தத் தொடங்கினர்.

அப்போது சரியாக மூன்று மணி அளவில் தொடர் ஓட்ட நீந்துதலில் மூன்றாவது இடத்தில் இருந்த பெங்களூரை சேர்ந்த கோபால் ராவ் (வயது-78) என்பவருக்கு திடீரென நடுக் கடலில் நெஞ்சுவலி ஏற்பட்டது.

இதனையடுத்து அவரை பரிசோதித்த மருத்துவக் குழு நெஞ்சு வலி காரணமாக கோபால் ராவ் உயிரிழந்ததை உறுதிப்படுத்தினர்.

இதனையடுத்து கோபால் ராவ் உடலை தனுஷ்கோடி பாலம் மீன்பிடித் துறைமுகத்திற்கு எடுத்து வந்த பின்னர் உடற்கூற்று ஆய்வுக்காக இராமேஸ்வரம் அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர்.

உடன் வந்த நபர் ஒருவர் உயிரிழந்ததால் 30 பேரும் மன்னார் முதல் தனுஷ்கோடி அரிச்சல்முனை வரை நீந்திக் கடந்து சாதனை படைக்கும் நிகழ்வை கைவிட்டனர்.

கோபால் ராவ் உயிரிழந்த தொடர்பாக இராமேஸ்வரம்நரைன் பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10,285)

## போதை ஊசி...

பருத்தித்துறை பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாண நகர் பகுதியை அண்டிய கிராமத்தை சேர்ந்த 34 வயதுடைய பெண்ணொருவரின் தாய் தந்தையர் உயிரிழந்ததை அடுத்து, குறித்த பெண்ணும், அவரது மூத்த சகோதரியும் பருத்தித்துறை பகுதியில் உள்ள ஆதரவற்றோர் பாதுகாப்பு இல்லத்தில் தங்கி இருந்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த டிசம்பர் மாதம், பெண்ணின் மூத்த சகோதரி உயிரிழந்த நிலையில், இவரது சகோதரன் இவரை தனது இல்லத்திற்கு அழைத்துச் சென்றிருந்தார்.

சகோதரனின் இல்லத்தில் தங்கியிருந்த வேளை ஜனவரி மாதம் சகோதரன் வீட்டில் அத்துமீறி வேளை உள்நுழைந்த கும்பல் ஒன்று போதைப் பொருளை வழங்கி, அதனை பலாத்காரமாக நுகர வைத்து, அடித்து துன்புறுத்தி வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளது.

தொடர்ந்து வந்த நாட்களிலும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்று வந்துள்ளன.

இந்நிலையில் நேற்று முன்தினம் பருத்தித்துறை பகுதியில் உள்ள தனது உறவினர் வீட்டில் குறித்த பெண் தங்கி நின்ற வேளை அங்கும் குறித்த கும்பல் சென்று, பெண்ணுக்கு போதை ஊசி செலுத்தி, தாக்கி வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளனர்.

இதில் காயமடைந்த பெண் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில் தனக்கு நேர்ந்த கொடுமைகள் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

ஜனவரி மாதம் முதல் பல்வேறு தடவைகள் 10 பேரை உள்ளடக்கிய கும்பல் போதைப்பொருளை வழங்கி படுத்தி நுகர வைத்து, பல தடவைகள் அச்சுறுத்தல் விடுத்து, தன்னை வன்புணர்வுக்கு உட்படுத்தி வந்தனர் என தெரிவித்துள்ளார்.

பெண்ணின்வாக்குமூலத்தை முறைப்பாடாகப் பதிவு செய்துள்ள பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,10,60)

## ஊடகங்களை...

சாளர் க.சுகாஷ் தெரிவித்துள்ளார்.

வட மாகாண ஆளுநரின் பொலிஸ் முறைப்பாட்டுக்கு அமைவாக வலம்புரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் வெளியிட்ட கண்டன அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த கண்டன அறிக்கையில்,

ஜனநாயகத்தின் குரலான வலம்புரிப் பத்திரிகையில் கைவைப்பதையோ ஆசிரியரை அச்சுறுத்துவதற்காக விசாரணைகளை முன்னெடுப்பதையோ வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது. தமிழ் ஊடகங்களின் குரல்வளையை அடக்க முற்படுவது தமிழ்த் தேசத்தின் ஆன்மாவை நசுக்கு வதற்கு ஒப்பான தாகும். ஊடக அடக்குமுறைக்கு எதிராக எமது வன்மையான கண்டனங்களைத் தெரிவிப்பதோடு, ஊடக உறவுகளுக்கு அநீதி இழைக்கப்பட்டால் அவர்களுக்காக வீதிக்கு இறங்கவும் தயங்கமாட்டோம் என்பதைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## ஈரான்...

பொலிஸாரும் முப்படையினரும் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக அமைச்சர் டிரான் அலஸ் குறிப்பிட்டார்.

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி இன்று நாட்டிற்கு வருகை தரவுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நேற்று முன்தினம் உறுதிப்படுத்தியிருந்தார்.

உமா ஓயா பல்நோக்குத் திட்டத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக ஈரான் ஜனாதிபதி நாட்டிற்கு வருகை தரவுள்ளார்.

ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியின் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின்போது இலங்கை அரசாங்கத்துடன் ஐந்து உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளதாக இலங்கைக்கான ஈரான் தூதுவர் அலிரேசா டெல்கோஷ் தெரிவித்துள்ளார். (ம-7,10)

## சிறைச்சாலை...

சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட சந்தேக நபர், கசிப்பு காய்ச்சியது தொடர்பில் 19.04.2024 அன்று கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தினால் வழக்குகளுக்காக காவலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் இம்மாதம் 20ஆம் திகதி அன்று மாலை யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு நேற்று முன்தினம் மதியம் 12:00 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7,10)


மஹஜன சம்பத — திகதி 2024.04.23 — சீட்டிழுப்பு இலக்கம் 5454 — E 0 9 4 1 6 5
அத சம்பத — E 4 1 6 5 — சீட்டிழுப்பு இலக்கம் 0029 — National Lotteries Board

தன நிதானய — திகதி 2024.04.23 — சீட்டிழுப்பு இலக்கம் 1484 — V 20 22 43 58 V — Double Chance 57080

மெகா பவர் — திகதி 23/04/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1802 — Y 22 12 45 58 79 — Double Chance 05744

லக்ஸ் 7 VIP — திகதி 2024.04.23 — சீட்டிழுப்பு இலக்கம் 0280 — K 8 9 9 0 3 9 K

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3696 — சீட்டிழுப்பு திகதி 23.04.2024 — F 06 21 44 50 — F 86678

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.04.23 — சீட்டிழுப்பு இலக்கம் 0763 — கடகம் 32 35 41 47 கடகம் — 18225 — 13

உத்தியோகபூர்வ முடிவுகள் — 23.04.2024 — வெற்றி வாரம் 162 — வர்ணம் சிவப்பு — E 0 2 2 2 5 1 — 66696 — U — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,964,264.00 — DLB — வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2428 — 23.04.2024 — செவ்வாய் — 31 38 46 72 B — 97624 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 84,622,060.80 — DLB

சனிதா — திகதி 2024.04.23 — வெற்றி வாரம் 4589 — வர்ணம் பச்சை — 18 30 45 65 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,657,746.00 — 70082 — DLB

சசிரி — வெற்றி வாரம் 468 — 2024.04.23 — 22 31 39 — 04 — ரூ.1,866,600/- — 22463 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4140 — வர்ணம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2024.04.23 — தினம் செவ்வாய்க்கிழமை — 01 08 41 56 — மகரம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,939,333.20 — 242386 — DLB

கப்ருக — I 13 25 35 39 67 — 1604 — 733936 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 518,816,992.60 — 23.04.2024 செவ்வாய் — DLB

அட கோட்டிபதி ADA KOTIPATHI — செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் 2254 — சீட்டிழுப்பு திகதி 2024.04.23 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 107,827,987.20 — 01 11 19 28 C — 598706 — DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org